Registered as a News Paper   பக்கங்கள் 08   விலை ரூபா: 6-00

# ஈழநாதம்

வெள்ளி மஞ்சரி

நாதம் 03   திருவள்ளுவர் ஆண்டு 2024   தை 16   (29-01-1993)   வெள்ளிக்கிழமை   ஓசை 846

## கிராம அலுவலர்களுக்கு பல்கலையில் பயிற்சி

யாழ். மாவட்ட கிராம அலுவலர்களின் பணித்திறனை மேம்படுத்தவும், பல்துறைகளில் அவர்கள் தரத்தினை உயர்த்திடவும் கிராம அலுவலர்களுக்கான மூன்று மாத கால பயிற்சி நெறி யாழ். பல்கலைக்கழக புறநிலைப்படிப்புகள் அலகினால் நடாத்தப்படவுள்ளது. யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 500க்கு மேற்பட்ட கிராம அலுவலர்கள் அனைவரும் இப் [8 ஆம் பக்கம் பார்க்க]

# கிளாலிக் கடலில் ஹெலி தாக்குதல்; படகு எரிந்து நாசம்; 5 பேர் மரணம்

## காயத்துடன் ஒருவர் கரைசேர்ந்தார்

[யாழ்ப்பாணம்]

ஆலங்கேணியிலிருந்து கிளாலி நோக்கி வந்து கொண்டிருந்த பயணிகள் படகொன்றின் மீது நேற்று முன்தினம் சிறிலங்கா விமானப்படை ஹெலிகொப்டர் ஒன்று இருமுறை தாக்குதல் நடாத்தியதில் ஐந்து பொதுமக்கள் பலியாகினர். ஒருவர் காயமடைந்த நிலையில் நீந்திக் கரை சேர்ந்தார். படகு தீப்பற்றி எரிந்து சாம்பராகியது.

ஆலங்கேணியிலிருந்து சுமார் 4மைல் தூரத்தில் காலை 8.30 மணியளவில் இத் தாக்குதல் நடைபெற்றதாக தெரிவிக்கப்படுகிறது.

இச் சம்பவம்பற்றி மேலும் தெரியவருவதாவது; காலை 7.30 மணியளவில் ஆலங்கேணியிலிருந்து படகோட்டி உட்பட ஆறுபேர் இப் படகில் பயணம் செய்துகொண்டிருந்தனர் அப்பொழுது பூநகரியிலிருந்து ஆனையிறவுப் பக்கமாகச் சென்றுகொண்டிருந்த உலங்கு வானூர்தியொன்று இப் படகை வட்டமிட்ட பின்னர் தாக்குதல் நடாத்த தொடங்கியது. இத்தாக்குதலில் ஓட்டியும வேறொருவரும் பலியாகினர். படகின் ஒரு பகுதி தீப்பிடித்துக்கொண்டது.

இதனையடுத்து ஆனையிறவு முகாமிற்கு திரும்பிய உலங்குவானூர்திமீண்டும் திரும்பி வந்து தாக்குதல் நடாத்தியது. இத் தாக்குதலால் படகு முற்றாக எரியத் தொடங்கியது. அப்போது வேறு இருவர் பலியாகினர்.

காயமடைந்திருந்த இரு பயணிகளும் கடலில் குதித்து [8 ஆம் பக்கம் பார்க்க]

## பேசாலையில் ராணுவம் சூடு; அகதிகள்உட்பட ஐவர்காயம்

### வீடுகள் பல தீக்கிரை

(பேசாலை)

பேசாலைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரின் அடாவடித்தனங்கள் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வெள்ளிக்கிழமை காலை இப்பகுதிக்கு வந்த படையினர் கண்மூடித்தனமான துப்பாக்கிப் பிரயோகங்களை மேற்கொண்டனர். பலமணிநேரமாக மேற்கொண்ட இத் துப்பாக்கிப் பிரயோகத்தில் பேசாலை அகதிமுகாமில் தங்கியிருந்த இரு அகதிகள் உட்பட ஐவர் படுகாயமடைந்தனர். இவர்களில் ஒருவர் அவசர சிகிச்சைக்காக கொழும்பிற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை இப் பகுதியில் இருந்த கட்டடங்களுக்கு படையினர் தீவைத்துள்ளனர். இதனால் இப் பகுதியில் இருந்த மூன்று கடைகள் முற்றாக எரிந்து சாம்பராகின.

## திருமலைப் படகு விபத்து 80 பேர் இறந்திருக்கலாம்

(திருமலை)

திருமலை கடற்பரப்பில் அண்மையில் மூழ்கிய பயணிகள் படகில் பயணம் செய்த 67 பேர் படகிற்குள் சிக்கி இறந்திருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

திருகோணமலையிலிருந்து கடந்த திங்கட்கிழமை மூதூருக்குச் செல்லும் வழியில் 110 பயணிகளுடன் மூழ்கிய பயணிகள் படகில் பயணம் செய்தோரில் 13 சடலங்களே இதுவரை மீட்கப்பட்டுள்ளது. ஏனையோரில் 30 பேர் உயிர் தப்பியுள்ளனர். ஏனைய 67 பேரின் சடலங்கள் இதுவரை கரை ஒதுங்காததினால் இவை அமிழ்ந்துபோன படகின் கீழ்ப் பெட்டிக்குள் சிக்கியிருக்கலாம் என நம்பப்படுகிறது.

## வெள்ளைக் கொடி காட்டியும் ஹெலி படகு மீது சுட்டது

### உயிர்தப்பியவர் விபரித்த பயங்கர சம்பவம்

[யாழ்ப்பாணம்]

"முதல்முறை ஹெலி நடத்திய தாக்குதலால் படகில் பிடித்த தீயை அணைத்துக் கொண்டிருந்தபோது மீண்டும் வந்த ஹெலிகொப்டர் எம் மீது இருபதடி உயரத்தில் பறந்தவாறு தாக்குதல் நடாத்தியது இதனால் படகு முற்றாக தீப்பிடித்து எரியத் தொடங்கியது".

இவ்வாறு நேற்று முன்தினம் கிளாலி கடற்பரப்பில் பயணிகள் படகு மீது சிறிலங்கா விமானப்படையின் உலங்கு வானூர்தி நடத்திய தாக்குதலில் காயங்களுடன் தப்பி வந்த மண்டைதீவைச் சேர்ந்த பார்த்திபன் என்பவர் தெரிவித்தார்

அவர் மேலும் தெரிவிக்கையில்; "நேற்று முன்தினம் காலை 7.30 மணியளவில் நாம் படகு ஒன்றின் மூலம் ஆலங்கேணியிலிருந்து கிளாலியை நோக்கிப் பயணமானோம். படகில் ஓட்டி உட்பட ஆறுபேர் இருந்தோம் சிறிது நேரத்தில் பூநகரியிலிருந்து ஆனையிறவை நோக்கிச் சென்றுகொண்டிருந்த ஹெலிகொப்டர் ஒன்று எமது படகை வட்டமிட்டது நாம் வெள்ளைக் கொடியைக் காட்டினோம். திடீரென ஹெலிகொப்டரிலிருந்து துப்பாக்கிச் சூடு நடாத்தப்பட்டது எமது படகின் ஒரு பகுதி தீப்பற்றி எரியத் தொடங்கியது. நான் உடனே கடலில் குதித்துவிட்டேன். சிறிது நேரத் தாக்குதல் நடத்திய ஹெலிகொப்டர் ஆனையிறவு நோக்கிச் சென்றுவிட்டது.

[8 ஆம் பக்கம் பார்க்க]

## ஜெயச்சந்திரனைச் சந்திக்க நீதிபதி அனுமதி மறுப்பு

[சென்னை]

விடுதலைப் புலிகளின் கப்பலின் கப்டனான ஜெயச்சந்திரனைச் சந்திக்க வழக்கறிஞர் கொடுத்த மனுவை நீதிபதி நிராகரித்துள்ளார்.

அண்மையில் விடுதலைப்புலிகளின் கப்பல் எனக் கருதப்படும் எம்.பி ஆஷா த்தில் பயணம் செய்த தளபதி கேணல் கிட்டு உட்பட படகிலிருந்தோரை இந்தியக் கடற்படையினர் கைதுசெய்ய முற்பட்டபோது அதில் பயணம்செய்த ஊழியர்கள் கடலில் குதித்ததும் பின்னர் அவர்களில் ஒன்பது பேரை இந்தியக் கடற்படையினர் கைது செய்தமையும் தெரிந்ததே.

இவர்கள் ஒன்பது பேரும் தற்போது விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ள செய்திகள் ஏற்கனவே வெளியாகின.

இதில் கைது செய்யப்பட்டவர்களுள் ஒருவரான ஜெயச்சந்திரனின் வழக்கறிஞர் ஜெயச்சந்திரனைச் சந்திப்பதற்கு அனுமதி வேண்டியிருந்தார்.

விசேட நீதிபதி எம். ராமகிருஷ்ணா வழக்கறிஞரின் கோரிக்கையை நிராகரித்து விட்டார்.

## பூநகரி பாதை திறப்பதுபற்றி அரசு பரிசீலனை செய்கிறதாம்

### ராணுவம் வாபசாகும் சாத்தியமில்லையாம்

(கொழும்பு)

யாழ். கடல் நீரேரியை மீண்டும் பொதுமக்களின் பாவனைக்குத் திறப்பது தொடர்பாக சிறிலங்கா அரசாங்கம் தீவிரமாக ஆலோசித்து வருகிறது எனவும் இதுதொடர்பாக அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு பேச்சுவார்த்தை நடாத்திவருவதாகவும் சிறிலங்கா ஜனாதிபதியின் ஆலோசகர் பிரெட்மன் வீரக்கோன் தெரிவித்தார். ஆனால் எது எப்படி இருப்பினும் இராணுவ முகாமை அகற்ற இராணுவம் தயாராக இல்லை என மேலும் அவர் தெரிவித்தார்.

யாழ் குடாவை முற்றுகையிடவும், புலிகளின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தவும் நடவடிக்கை எடுப்பதாககூறிக் கொண்டு கடந்த ஒக்டோபர் மாதம் முதல் இப்பகுதிபொது மக்களின் பாவனைக்கு மூடப்பட்டுள்ளதாகவும் மீறிச் செல்வோர் சுடப்படுவர் எனவும் சிறிலங்கா அரசு அறிவித்திருந்தமை தெரிந்ததே.

இப்பாதை மீண்டும் திறக்கப்பட்டாலும் பொதுமக்கள் சங்குப்பிட்டியிலேயே வந்து இறங்கி பயணத்தை தொடர வேண்டும் என பிரட்மன் வீரக்கோன் தெரிவித்தார்.

ஆனால் சங்குப்பிட்டியிலுள்ள இராணுவ முகாம் அகற்றப்பட்டால் மட்டுமே தாம் இதை ஏற்க முடியும் என விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை இப்பாதையினை பாவிப்பதற்கு உதவி (8 ஆம் பக்கம் பார்க்க)

விழுப்புரத்தில்

## காந்தி சிலை தகர்ப்பு; பேராசிரியர் கைது

காந்தி சிலை தகர்ப்புத் தொடர்பாகத் திண்டிவனத்தைச் சேர்ந்த கல்லூரிப் பேராசிரியர் கல்யாணி என்பவர் கைது செய்யப்பட்டார்.

தென்னாற்காடு மாவட்டம் விழுப்புரத்தில் சென்ற திங்கட்கிழமை காந்தி சிலை தகர்க்கப்படக் காரணமாயிருந்த குண்டு வெடிப்புச் சம்பவம் தொடர்பாகவே பேராசியர் கைது செய்யப்பட்டிருக்கிறார் என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

## பலத்த குண்டுச் சத்தம்

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்குப் பகுதியில் நேற்றுமுன்தினம் பகல் ஒரு மணியளவில் பலத்த குண்டுச் சத்தங்கள் கேட்ட வண்ணமிருந்தன.

அதேவேளை குண்டு வீச்சு விமானமும், உலங்கு வானூர் (8 ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### கடிகாரமா ? றேடியோவா?

உங்கள் கடிகாரங்கள், றேடியோக்களை உத்தரவாதத்துடன் திருத்திக் கொள்ள எம்மை நாடுங்கள். (சகல கடிகார பற்றிகளும் எம்மிடம் உண்டு). தரமான கடிகாரங்கள், றேடியோக்கள் நியாய விலைக்கு விற்றுத் தரப்படும் DILKA WATCH & RADIO WORKS 284, ஸ்ரான்லி வீதி, (வானவில் கூல்பார் அருகில்) யாழ்ப்பாணம். கிளை: இலங்கை வங்கி அருகாமையில் சாவகச்சேரி. (சி-5795)

### மாற்றம் :02

மக்கள் மத்தியில் ஏற்பட வேண்டிய மாற்றங்களைக் கொண்ட "மாற்றம்" (தைபங்குனி) சஞ்சிகை சிறுவர் கதை, சிறுகதை, அறிவியல் துணுக்குகளைக் கொண்டு வெளிவந்துவிட்டது ரூபா 10/- புத்தகசாலைகளில் கிடைக்கும். வெளியீடு தமிழ்த்தாய் மன்றம் (4126)

### வியாபாரிகட்கு

உள்நாட்டு, வெளிநாட்டு அழகுசாதன பொருள்களும், லேஸ் தையல் பொருள்கள், எவர்சில்வர், ஸ்கூல் ரவலிங் பாக், இமிரேசன் கவரிங் நகைகள், விளையாட்டுப் பொருள்கள் மொத்தமாகப் பெற்றுக்கொள்ள ஜெயா அழகுசாதன மாளிகை 177A மின் நிலைய வீதி, யாழ்ப்பாணம். (சி-5853)

### பாலராசிரியர் பயிற்சி

பாலராசிரியர் பயிற்சி விரைவில் ஆரம்பமாகும் க.பொ.த (சா.த) கடைசித் தகைமை ஆகும். நேரில் வரமுடியாதோர் தபால் வழியிலும் பயிலலாம். பாலராசிரியர் சங்கம், மே/பா உயர்கலைக் கல்லூரி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். [4157]

### தவறிவிட்டது

சின்னத்தம்பி துரைசிங்கம் என்பவருடைய அடையாள அட்டை இல. 382561724V நெல்லியான் வீதியில் அல்லது சுழிபுரம் - சித்தன்கேணி வட்டுக்கோட்டை வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (4165

### கல் தேக்கு விதை

கல் தேக்கு விதை தேவை. "மில்க்வைற்" (சி- 5888)

---

# விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லிறோட், யாழ்ப்பாணம்.

**92** கலை, வர்த்தகம்
சனி, ஞாயிறு மீட்டல்

**ஆரம்பம்:- 30-01-93, 8.00 மணி**

| | | |
|---|---|---|
| பொருளியல் | — | திரு. கலாகரன் |
| வர்த்தகம் | — | திரு. தேவா |
| கணக்கியல் | — | திரு. வன்னியசிங்கம் |
| அளவையியல் | — | திரு. விக்கி |
| தமிழ் | — | திரு. குழந்தை |
| இந்துநாகரிகம்] இந்துசமயம் ] | — | திரு. காரை.சுந்தரம்பிள்ளை |
| புவியியல் | — | திரு. குணராசா |
| அரசியல் | — | திரு. ஜெயகாந்தன் |
| வரலாறு | — | திரு. சிறிதரன் |

பிரத்தியேக கணக்கியல் மீட்டல்

திரு *S. K* பிரபாகரன் (2.00 — 5.00) மணி

அனுமதிகளை முன் கூட்டியே பெற்றுக் கொள்ளலாம்.

(சி/5860)

---

# BECON

## (பாரதிதாசன்)

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

**G. A. Q. / B. A.**

பேராதனைப் பல்கலைக்கழகம்

**தமிழ் புதிய பகுதிகள்**
**ஆரம்பம் 30 01-1993 (சனி)**

**G. A. Q.** சனி ) ஞாயிறு ) 12-1 மணி இலக்கணம்
சனி ) ஞாயிறு ) 1-2 மணி இலக்கியம்

**B. A.** இலக்கியமும் திறனாய்வும்
சனி ) ஞாயிறு ) 11-12 மணி
வெள்ளி) 3-5 மணி

விரிவுரையாளர்:- சி. கணேசலிங்கம்
B. A. (Hons, Cey) (தமிழ்)

குறிப்பு:- யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தமிழ் பகுதி I வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

(சி-5881)

---

## இனிமை, புதுமை ஈழத்தின் தேசிய
# தாச்சிச் சுற்றுப் போட்டி

இடம்: கலைவாணி சனசமூக நிலையம் வளாக வீதி, கலட்டிச் சந்தி, யாழ்ப்பாணம்.

காலம்: 31-1-93 பிற்பகல் 3-30 மணி.

பங்குபற்றும் கழகங்கள்:-

யுவசக்தி சுதுமலை எதிர் சிவசக்தி தாவடி

காந்திஜீ சங்கானை எதிர் விநாயகர் சித்தன்கேணி

விளையாட்டுத் தலைவர்
த. சாந்தகுமார்

(4167)

---

## திறந்த பல்கலைக் கழகம்
# முக்கிய அறிவித்தல்

பட்டமேற் கல்வி டிப்ளோமா
POST GRADUATE DIPLOMA IN EDUCATION

1990 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் விண்ணப்பித்தவர்களை இம்முறை பதிவு செய்ய அனுமதி கிடைத்தபடியால், விண்ணப்பதாரிகள் உடன்யாழ். பிராந்திய நிலைய அலுவலகத்துடன் 31-01-93 க்கு முன்னர் தொடர்பு கொள்ளவும். அலுவலகம் சனி, ஞாயிறு உட்பட திறக்கப்பட்டிருக்கும்.

பிறவுண் வீதி,
கொக்குவில்.

உதவிப் பணிப்பாளர்
யாழ். பிராந்திய நிலையம்

(சி/5889)

---

# விற்பனைக்கு உண்டு
# இந்தியன் ஒலிம்பியாஎஞ்சின்

கிராங் உடைந்த நிலையில் மிகுதி பாட்ஸ் நல்ல நிலையில் உள்ளது. மிகக் குறைந்த தேய்வனவு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி.

S. S. R. அரிசி ஆலை
முதலாம் கட்டை,
டச்சுவீதி, சாவகச்சேரி.

(4166)

---

# நினைவு கூருகின்றோம்...

## 1993-1-29

1986 ஆம் ஆண்டு இதே தினத்தில் வீரச்சாவெய்திய -

★ மணி [ஆசீர்வாதம் அருளப்பு - மூதூர் - திருக்கோணமலை]

மன்னார் - பரப்புக்கடந்தான் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய -

லெப். உமாக்காந் [பர்ணாந்து நீக்கிலாஸ் - காத்தான்குளம், வட்டக்கண்டல்- மன்னார்]

1987 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் - பருத்தித்துறைப் பகுதியில் மிதிவெடியில் சிக்கியதில் வீரச்சாவெய்திய -

பவுண் [மாணிக்கம் குணசிங்கம் - இமையாணன்மேற்கு நாவலடி, உடுப்பிட்டி - யாழ்ப்பாணம்]

1989 ஆம் ஆண்டு மணலாறு - அளம்பில் பகுதியில் இந்தியப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட முல்லைத்தீவு - தங்கபுரத்தைச் சேர்ந்த தமிழிளைஞன்.

1991 ஆம் ஆண்டு மணலாறு - முந்திரிகைக்குளம் முகாமிலிருந்து சாம்பன்குளம் முகாமிற்குச் சென்று கொண்டிருந்த சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய -

2-ம் லெப். முரளி [பாலசுப்பிரமணியம் செல்வகுமார் - உப்புவெளி - திருக்கோணமலை]

சபேசன் [விக்கினேஸ்வரன் முகுந்தன் - கெருடாவில் தெற்கு, மயிலியதனை, தொண்டமானாறு - யாழ்ப்பாணம்]

மட்டக்களப்பில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட ஏறாவூர், ஆறுமுகத்தான் குடியிருப்பைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன். தேசவிரோதக் குழுவினரால் சுட்டுக் கொல்லப்பட்ட லூர்த்து வீதியைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகள்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

★ இக்குறிப்பிடப்பட்டுள்ள மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவார்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி-5897)

---

## வெளிவாரி பட்டப்படிப்புகள்
# கல்வியாண்டு - 1993/94

பேராதனைப் பல்கலைக்கழகத்திற்கு பின்வரும் பட்டப் பாடநெறிகளுக்கான விரிவுரைகளுக்கு பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

★ கலைமாணி B.A

★ விஞ்ஞானமாணி B.Sc (புள்ளிவிபரவியல்)

க. பொ. த. உயர்தரம் 3 பாடங்களில் சித்தி அல்லது பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் விண்ணப்பிக்கலாம்.

**விரிவுரைகள் 1-2-93 இல் ஆரம்பமாகின்றன**

விபரங்களுக்கு:

**உதவிப்பதிவாளர்**
பட்டப்படிப்புக்கள் கல்லூரி
148/1 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(சி/5878)

# புதிய உலக ஒழுங்கமைப்பும் ஐ. நா. சபையின் தலையீடுகளும்

தமிழர் தேசிய இனப் பிரச்சினையில் ஐ. நா. தலையிடுவதற்கு இடமளிப்பதா, இல்லையா என்பது பற்றி தென்னிலங்கைப் பத்திரிகை உலகில் மிகவும் சூடான விவாதம் எழுந்திருக்கிறது. இந்த சர்ச்சை பற்றி விமர்சிப்பது எமது நோக்கமல்ல. இன்றைய புதிய உலக ஒழுங்கமைப்பை நிர்ணயிப்பதில் ஐ. நா. எத்தகைய பங்கை வகிக்கிறது., மூன்றாம் உலகத்து தேசிய நெருக்கடிகளில் ஐ. நா வின் தலையீடு எவ்வாறு அமைந்திருக்கிறது. இன்றைய உலகின் ஒரே வல்லரசான அமெரிக்கா தனது பூகோள வல்லாதிக்க அபிலாஷைகளையும், பொருளாதார வர்த்தக நலன்களையும் பேணும் நோக்கில் எவ்விதம் ஐ. நாவைஒரு கருவியாகப் பாவித்து செயற்படுகிறது? என்ற விவகாரம் பற்றி இக்கட்டுரையில் சுருக்கமாகப் பார்ப்போம்.

முந்திய உலக ஒழுங்கில் உலகம் இரு முகாம்களாக பிளவுபட்டிருந்தகாலத்தில், பனிப்போர் எனப்படும் நிழல்யுத்தம் நடைபெற்ற நேரத்தில் இரு வல்லரசுகளும் ஐ.நா சபையை புறம் தள்ளி ஒதுக்கி வைத்திருந்தன குறிப்பாக அமெரிக்கா ஐ. நாவுடன் பெரிதும் முரண்பட்டு நின்றது. அதற்கான பணக்கொடுப்பனவை இடைநிறுத்தம் செய்தது. தாமதப்படுத்தியது. ஐ. நா வின் ஒரு முக்கியஅலகான 'யுனெஸ்கோவை' ஐ. நா. கல்வி விஞ்ஞான, கலாசார நிறுவனம், 'பயங்கரவாத ஆதரவு அமைப்பு' எனக் கூறி அதிலிருந்து வெளியேறியது.

அக்காலகட்டத்தில் மூன்றாம் உலக நாடுகள் இரு வல்லரசுகளின் பிடியிலிருந்து ஐ. நா.விலகி நீதியான சமத்துவமான புதிய சருவதேச அணி ஒன்றை உருவாக்க வேண்டுமென முயன்றன. இது பழைய வரலாறு இன்று நடப்பது வேறு வரலாறு. சோவியத் சாம்ராஜ்யம் இடிந்து விழுந்தது. இதன் விளைவால் பனிப்போர் முடிவடைந்தது. அமெரிக்காவை தனி வல்லரசாக முடி சூடி விட்டு ரஷ்யா முடங்கிவிட்டது அமெரிக்காவுக்கு எதிரணி இல்லாத நிலை. அதே சமயம் நாட்டிலோ பெரும் பொருளாதார நெருக்கடி, உள்நாட்டில் மக்கள் வாழ்க்கைத் தர வீழ்ச்சி சருவதேச வர்த்தகத்தில் பெரும் பின்னடைவு. எனவே இத்தகைய பின்னணியில் உத்தியோக பூர்வமாக பிணக்குகளை தீர்க்கும் உலக பொலிஸ்காரனாக சருவதேசப் பின்னணியோடு ஒரு 'தார்மீக நியாயத்தோடு' செயற்பட விரும்பி அமெரிக்கா பாரிய முடிவொன்றை எடுத்தது. ஐ.நா விற்கு ஊடாக அது தன் செயற்பாடுகளை நிறைவேற்ற முடிவெடுத்தது. ஐ.நாவை முதன்மைப்படுத்தி தனதும் தனது மேற்கத்தைய நண்பர்களது நலன் கட்கும் பாதிப்பு இல்லாத வகையில் தனது வெளிநாட்டுக் கொள்கையை நிறைவேற்றும் தாபனமாக இன்று ஐ. நாவை மாற்றிவிட்டது. இப்போது அமைதி பற்றி அமெரிக்கா போதிக்கின்றது. மனித உரிமைகள் குறித்து விளக்கம் சொல்கின்றது. புதிய உலக ஒழுங்கினை ஐ.நா. மூலமாக உருவாக்கப் போவதாக அறைகூவல் விடுக்கின்றது. இதன் பலன் முடுக்கிவிட்ட பம்பரம் போல் இன்று ஐ.நாவின் செயலர் செயற்படுகின்றார். எனவே நீலக் கொடி தாங்கிய ஐ.நாவின் வெள்ளை நிற வாகனங்களின் பின்னே அமெரிக்கப் படைகள் முன்னணி வகிக்க உலகெங்கும் சருவதேச அமைதிப்படைகள் செல்லத் தொடங்கிவிட்டன. மேலும்அமெரிக்கா தான் இதுவரை பெரும் ஆதரவு அளித்து வந்த கிளர்ச்சிக் குழுக்கள், வலதுசாரி பிற்போக்கு இராணுவ அரசுகட்கு உதவியை நிறுத்தி அல்லது குறைத்து ஐ. நாவோடு ஒத்துழைக்கும்படி பணித்தும் விட்டது. விருப்பமில்லாவிட்டாலும் வேறு வழியில்லாமல் ஐ.நாவின் தலையீட்டை எல்லாருமே ஏற்க வேண்டிய நிலை. ஏனெனில் சோவியத் முகாமின் ஆதரவோடு இருந்த போராளிக் குழுக்கள், அரசுகளின் நிலையும் இதே தான்.

ஆனால் உண்மையில் நடப்பது என்ன? அமைதிப்பணிக்கு சென்ற ஐ.நாவின் செயற்பாடுகள் இன்றுசந்தேகத்திற்கும் கேள்விக்குமுரியதாக மாறிக் கொண்டு வருகின்றன. அகலக்கால் வைத்த ஐ.நா பெரும் சங்கடங்களுக்குள் இன்று சிக்குப்பட்டிருக்கின்றது. போர் நிறுத்தம் ஏற்பட்ட நாடுகளில் மீண்டும் போர்கள் தொடங்கிவிட்டன. ஐ. நாவின் எதிர்கால செயற்பாடுகள் குறித்த பெரும் கவலை அரசியல் ஆய்வாளர் மத்தியிலே மீண்டும் ஏற்பட்டுள்ளது.

இவ்வாறாக ஐ நா: வின் அமைதிப்பணியை கேள்விக் குறிகளாக்கிய ஒரு சில நிகழ்வுகளைப் பார்க்கலாம் எந்தப் போர்களை நிறுத்த ஐ நா முயன்றதோ அவை மீண்டும் ஐநாமுன்னிலையிலேயேஇன்று கம்போடியாவிலும்அங்கோலாவிலும் நடைபெற ஆரம்பித்து விட்டன. கம்போடியாவில் தான் எங்கும்மேற்கொள்ளாத வகையில் பாரிய அமைதிப்பணியை 25,000க்கு மேற்பட்ட ஆளணிகளை அனுப்பி மேற்கொண்டது. கம்போடிய அரசுக்கும் மூன்று போராளி அமைப்புகளுக்கும் இடையிலான அமைதி உடன் படிக்கை 1991 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் ஐ.நா தலைமையில்பாரிசில்கைச்சாத்திடப்பட்டது. இதனை நிறைவேற்றUNTAC எனப்படும் ஐ. நாவின் தற்காலிக ஆணைக்குழு ஒன்று உருவாக்கப்பட்டது. அண்டாக் (UNTAC) கம்போடியாவை தற்காலிகமாக நிருவகிக்க SNC எனப்படும் உயர்தேசிய மன்றை அமைத்து சகல ஆயுதங்களையும் களைந்து அகதிகளை மீளக் குடியேற்றி வாக்காளர் பட்டியலை தயாரித்து பொதுத்தேர்தலை நடாத்த வேண்டும். ஆனால் தொடக்கத்திலிருந்தே பொல்பொட் தலைமையிலான 'கைமர்ரூச், போராளி அணிகளுக்குதம்மை தனிமைப்படுத்தி இளவரசர் சிகானூர்த்தினை பதவிக்கு கொண்டு வர ஐ. நா முயல்வதாக சந்தேகம் தொடக்கத்தில் கம்போடிய அரசுக்கும் இளவரசர் சிகானூர்திற்கும் இருந்த நல்லுறவு இளவரசர் சிகானூர்தின் தம்பி தரோத்தம் சிறிவுத் புதிய அரசியல் கட்சி ஆரம்பித்தவுடன் மறைந்து விட்டது. இன்று மூன்று அணியினருமே ஐ. நா பக்கச் சார்பாக நடப்பதால் தாம் நம்பிக்கை இழந்துவிட்டதாக முறைப்படுகின்றன. அமைதிக்காக சென்ற ஐ. நா. வின் படையினரோ கேளிக்கைகளில் ஈடுபடுவதாக குற்றச்சாட்டு வேறு. இவற்றைவிட பொல்பொட் அணியினர் ஐ. நா. படையை மிரட்டுவதும் கடத்துவதுமாக இருந்து இறுதியில் தாக்கியும் விட்டனர். இப்போது மீண்டும் கம்போடிய அரசுக்கும் பொல்பொட் அணிக்கும் பெரும்போர் மூண்டு விட்டது. மீளக்குடியேற வந்த அகதி மக்கள் படும்துயர் கணக்கிலடங்காது. மீண்டும் பாதுகாப்புச் சபை கூடி பொல்பொட் அணியின் மீது பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளது. இவர்கட்கு எரிபொருள் கிடைப்பதைத் தடுத்து இவர்களின் பெரிய வர்த்தகத்தை (இரத்தினக்கற்கள், மரம்) தாய்லாந்தோடு நிறுத்துவதே இத்தடையின் நோக்கம், தாய்லாந்து ஒத்துழைப்பதாகக் கூறினாலும் 550 கி. மீற்றர் பரந்த எல்லையில் ஐ. நா. கண்காணிப்பாளரை நிறுத்த மறுத்து விட்டது அதைவிட

(4-ஆம் பக்கம் பார்க்க)

பாலகுமாரன்

# "தமிழிசையின் ஊற்றுக்கண் பண்ணிசை"

★ பண்ணிசை மற்றும் தமிழிசை குறித்து மக்களிடையே ஒரு தெளிவான எண்ணக் கரு இல்லை. பண்ணிசை என்றால் என்ன? தமிழிசை என்றால் என்ன? கர்னாடக இசை என்றால் என்ன? இந்த அடிப்படைக் கேள்விகளுக்கு விளக்கம் தர முடியுமா?

தமிழ் பண்பாடல்கள் தமிழ் அல்லாதவேறு எந்தப் பிற மொழியிலும் இல்லை. தமிழ்ச் சாகித்தியத்துக்கு முக்கியத்துவம் அளிப்பது பண்ணிசை. இந்திய இசை மரபில் அகத்தியர் காலம் முதல் சோழர் காலம்வரை நிலவிய இசை தான் பண்ணிசை. தமிழிசையில் ஊற்றுக்கண், கருப்பொருள் எல்லாம் பண்தான். பண்ணிசையில் தற்கால நிலைப்பாடு தேவாரப் பண்களினூடாக மக்களுக்குப் புலப்படுகிறது. தொல்காப்பியம், பதினெண் கீழ் கணக்கு. பரிபாடல்; சிலப்பதிகாரம், தேவாரப் பண்கள், பாவநாசம் சிவன் பாடல்கள் ஆகியவற்றின் ஊடாகப் பண்ணிசையின் சாஸ்திரீய வளத்தை அறியக்கூடிய மரபொன்று சங்க காலத்திலிருந்து தேவார காலம் வரை நிலவியிருப்பதை தமிழிசை ஆய்வாளர் தெளிவாக உணர்வர். மற்றும்படி கர்னாடக இசைக்கு மூலக் கருவாக விளங்கியவையும் தமிழ் பண்களே. கர்னாடகஇசைகி.பி 12ஆம் நூற்றாண்டில்தான் தமிழ் நாட்டில் அறிமுகமாகியது. கர்னாடக இசைப் பாடல்கள் கன்னடம், தமிழ், தெலுங்கு உள்ளிட இந்திய கலப்பு மொழிகள் பலவற்றிலும் உள்ளன. இந்திய இசை, கர்னாடக இசை. ஹிந்துஸ்தானி இசை என்று பிரித்தபோது தமிழ்ப் பண்ணிசையின் நுணுக்கங்களும், யாழ் இசைக் கருவிகள் பற்றிய விளக்கங்களும் வரலாற்றில் இருந்து மறைக்கப்பட்டன. இந்த மறைப்பை வெளிக் கொணர்ந்த முக்கியஸ்தர்களில் தஞ்சாவூர் ஆபிரகாம் பண்டிதரும், ஈழத்து விபுலானந்த அடிகளாரும் குறிப்பிடத்தக்கவர்கள்.



★ தமிழ்நாட்டில் கர்னாடக இசை வளர்ந்த அளவுக்குப் பண்ணிசை வளரவில்லை.

பண்ணிசையை வளர்த்தவர்களும், ஆதரித்தவர்களும் தமிழ் பற்று மிக்கோரும் பண்ணிசையின் அணிகலங்களாய் இருந்தனர். ஆனால் ஆரியர் பண்பாட்டின் தாக்கம் தமிழ் பண்ணிசையை குற்றுயிர்அடையச்செய்தது. தமிழரல்லாத அந்நியர் ஆட்சி முறையே இதற்குக் காரணம். 1928 இல் அண்ணாமலைப் பல்கலைக் கல்லூரியும் தமிழ் இசைக்கல்லூரியும்,1944இல் சென்னை தமிழ் இசைச் சங்கமும், பண்ணாராட்சி மன்றமும் ராஜா சேர்அண்ணாமலைச் செட்டியாரால் நிறுவப்பட்டன. இந்த மையங்கள் வரலாற்று ரீதியாக பண்ணிசையின் வளர்ச்சிக்கு பல சாத்தியக்கூறுகளை ஏற்படுத்தித் தந்தன. தமிழ்நாட்டிலுள்ள ஆதீனங்கள் இன்றும் பண்ணிசை வளர்ச்சியில் முன்னணியிலும், பண்டைய நிலையில் இருப்பதனையும் காணலாம்,

★ பண்ணிசை பாடும் ஒருவர் கர்னாடக இசை பாடலாமா?

தற்காலத்தில் இந்திய சங்கீதத்தில் வேரூன்றியுள்ள ராகங்களின் சாயல்களை அடிப்படையாகக் கொண்டே நம் முன்னோர் அருளிச் செய்த பண்டைய பண்களின் இசை நுணுக்கங்களை அறியக் கூடிய நிலை ஏற்பட்டுள்ளது. பண்ணிசை நுணுக்கங்களைஉள்வாங்கிக் கொண்ட ஒருவர் கர்னாடக இசை பாடும் மரபை அறிந்து பாடலாம். அதே போல், கர்னாடக இசையில் தேர்ச்சி பெற்றவர் பண்ணிசையை அறிந்து பாடுவதில் தப்பொன்றும் இல்லை. இசை என்ற மொழி பொதுவானது அது ஹிந்துஸ்தானி, கர்னாடகம், பண்ணிசை, ஐரோப்பிய இசை என்று வேறுபடலாம். ஆனால்ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு சிறப்பு அம்சம் உண்டு. இதனைக் கருத்திற் கொண்டு, பாடுதல் என்ற செயற்பாட்டில் வேற்று இசைகளையும் பாடலாம்.

★ கர்னாடக இசை, பண்ணிசை, மேற்கத்தியஇசைகளோடு உங்களுக்கு ஏற்பட்ட தொடர்புகள் எப்படியானவை?

எங்களுடைய பரம்பரையில் மூன்று நான்கு பரம்பரையினர் பண்ணிசைப்பதி

( 7ஆம் பக்கம் பார்க்க)

★ இசை சமஸ்கிருத மயமாக்கப்பட்டதால்(SANSKRITISATION) இந்நிலை ஏற்பட்டிருக்கலாமா?

வேற்று மொழி ஆட்சி முதலில் அரசியல் - சமூக களத்தைத் தாக்கியது. 12ஆம் நூற்றாண்டுக்கு முன்னர்

நா. வி. மு. நவரெத்தினம்(வயது 42) அண்ணாமலைப்பல்கலைக்கழகத்தில் சங்கீதபூஷணம் கற்கை நெறியில் முதலாம் ஸ்தானம் பெற்றவர். தவிர கும்பகோணம் திருப்பனந்தாழ் ஆதீனம் செந்தமிழ் கல்லூரியில் நான்கு வருட விசேட பண்ணிசை டிப்புளோமாவில் முதன்மையாகத் தேறியவர். பண்ணிசையின் சிகரமெனப் பாராட்டி திருநாங்கூர் சமஸ்தானம் மற்றும் சிதம்பரம் பதஞ்சலி வியாக்கிரபாத சங்கீத அனுக்கிரக சபா ஆகியன அவருக்கு பட்டங்கள் வழங்கிக் கௌரவித்தன. 1978இல் தமிழ் இசைச் சங்கம் நடத்திய பண்ணாராட்சி மாநாட்டில் திருப்பனந்தாழ் ஆதீனத்தின் பிரதிநிதியாகக் கலந்து கொண்ட பெருமை சங்கீதபூஷணம் நவரெத்தினத்தையே சாரும். அகில இந்திய வானொலியில் ஒருமணிநேரம் கச்சேரி பண்ணிய முதல் ஈழத்தமிழர் இவரே. பண்ணிசையை ஒரு தொழிலாகவும், கலையாகவும் தொடர்வதில் பெருமை கொள்ளும் இவர், இராமநாதன் அக்கடமியில் சங்கீத போதனாசிரியராக ஆரம்பித்து விரிவுரையாளராகி, டிசம்பர் 1992 முதல் அக்கடமியில் பண்ணிசைத்துறை இணைப்பலுவலகராக நியமனம் பெற்றுள்ளார். தீவிரத்துடன் செயல்படுவதன் மூலம் பண்ணிசையை மேம்படுத்திவிட முடியும் என்பது இவரது நம்பிக்கை.

சந்திப்பு: மதன்

## சிறுகதை

# மர நாய்கள்

**தேவமுகுந்தன்**

அந்தக் கிராமத்திலிருந்து இடம் பெயர்ந்திருந்த குடும்பங்களில் சில குடும்பங்கள் திரும்பி வீடுகளுக்கு வந்து இரண்டு மூன்று நாட்கள் தான் ஆகியிருந்தது. சில வீடுகள் பூட்டியபடி கிடந்தன. ஷெல்கள் வந்து விழுந்ததால் பல வீடுகள் சேதமடைந்திருந்தன. வீதிகளிலும் தோட்டங்களினூடாகவும் செல்லும் மின் கம்பிகள் அறுந்து தூங்கிக்கொண்டிருந்தன. ‘செயின் பிளக்குகள்’ வாழைகளை அழித்திருந்தன. எஞ்சிய வாழைகளை கட்டாக்காலி கால்நடைகள் அழித்து விட்டிருந்தன. வீதியின் சில இடங்களில் கைவிடப்பட்ட காவலரண்கள் காணப்பட்டன. சிலமதில்களில் ஹிந்தி வாசகங்கள் எழுதப்பட்டுக் கிடந்தன. இராணுவ முற்றுகைக்குள் இருந்த அந்தக் கிராமத்தில் மயான அமைதி நிலவியது. ஊரில் மத்தியில் உள்ள பாடசாலையில் முகாம் அமைத்திருந்த படையினர் அடிக்கடி தோட்டங்களினூடும், வீதியாலும் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

அம்மா தான் அந்தக் கோழியை வாங்கி வந்தார். திருநெல்வேலி கோழிப் பண்ணையிலை ஆமிக்காரர் நெடுகலும் போய் கோழிகளைப் பிடித்துக் கொண்டு போறாங்களாம். கோழிகளுக்குச் சாப்பாடு குடுக்கிறதும் பிரச்சினையாய் இருக்காம். பண்ணையை பூட்டப்போறார்களாம். கோழி நாற்பது ரூபாவாம். சும்மா நாளிலை எண்டால் எழுபத்தைஞ்சு ரூபாவுக்கும் வாங்கேலாதாம்.

முதுகுப் புறத்தில் இறகுகள் கொட்டிண்டு போய் சிறிய காயத்துடன் நின்ற கோழியை கோபி ஆவலாய்ப் பார்த்தான். அதன் கொண்டைப் பூவில் இருந்த காயத்திலிருந்து இரத்தம்வடிந்துகொண்டிருந்தது. பண்ணையிலை நிக்கேக்கை சாப்பாடில்லாமல் கொத்துப்பட்டிருக்க வேணும். அதன் வெள்ளை நிற இறகுகள் அழுக்குப் பிடித்து பழுப்பு நிறமாகி இருந்தன. கோழியின் இரண்டு கால்களையும் சேர்த்து ஒரு சீலைத் துண்டால் கட்டியிருந்தார்கள்.

கோபி கோழியின் காயங்களுக்கு காகச் செட்டையால் நலெண்ணெய் தடவினான். கோழியை இரு கைகளாலும் தூக்கிக் கொண்டு கிணற்றடிப் பக்கம் போனவன் மழை நீரால் நிரம்பியிருந்த பழைய கிடாரத்துக்குள் கோழியை குளிப்பாட்டினான். குளிரினால் நடுங்கிக் கொண்டிருந்த கோழி உதறியது. கோழியின் கால்களைச் சேர்த்துக்கட்டியிருந்த சீலைத் துண்டை அவிழ்த்த கோபி ஒற்றைக் காலில் சீலைத் துண்டைக் கட்டி அதனுடன் நீளமான கயிற்றை இணைத்து கிணற்றடியல் நின்ற மாதுளையில் கட்டினான். கொஞ்ச அரிசியை எடுத்துக் கொண்டுவந்து போட்டான்.

வீட்டின் பின் புறத்தில் செயின் புளக்கால் பிரிக்கப்பட்டிருந்த வாழைத் தோட்டத்தின் வேலியை சீராக்கிக் கொண்டிருந்த தமயனிடமும் தகப்பனிடமும் ஓடிச் சென்று ''அம்மா கோழி வாங்கித் தந்தவ'' என்று கத்தி விட்டு கிணற்றடியை நோக்கி திரும்பி ஓடினான். அவனுடைய கோழியை துரத்திவிட்டு வேறொரு கோழி அரிசியைத் தின்று கொண்டிருந்தது கல்லால் எறிந்து அதைத் துரத்தியவன் தனனுடைய கோழியைப் பிடித்து அரிசியைத் தின்ன விட்டுப் பார்த்துக் கொண்டு நின்றான்.

★ ★

கால்நடைகள் கடித்திருந்த வாழைகளை தமயன் குறுக்கால் வெட்டி விட்டிருந்தான. அவைகளில் இருந்து குருத்துக்கள் கிளம்பியிருந்தன. பிரிக்கப் பட்டிருந்த வேலிக்கு கதியால்கள் போட்டு சீராக்கிக்கொண்டிருந்தார்கள். கோழியின் காயங்கள் மாறியிருந்தன. கோழியின் பழுப்பு நிறமாயிருந்த இறகுகள் இப்போது பால் நிறமாகியிருந்தது தோட்டத்து வாய்க்காலைகிளறிக்கொண்டு நின்ற கோழியை கோபி பார்த்துக்கொண்டு நின்றான். முந்தநாள் தான் அடுப்பை மூன்று தரம் சுற்றிவிட்டு கோழியை அவிழ்த்து விட்டிருந்தான். அப்படிச் செய்தால் தானாம் கோழி துலையாதாம். கோழி படுப்பதற்காய் முந்தநாள் பின்னேரம் முருங்கையில் ஏற்றிவிட்டிருந்தான். நேற்று பின்னேரம் கோழி முருங்கையில் ஏறுவதற்கு தாவித் தாவி விழுந்தது.

கோபி ஒரு பலகையை முருங்கையில் சாத்தி விட்டிருந்தான். அதில் ஏறிய கோழி முருங்கையில் ஏறிக்கொண்டது. நேற்று இரவு கோபி கோழி மரத்தல் ஏறியதை தமயன், தாய், தகப்பன் எல்லோரிடமும் கனநேரம் சொல்லிக் கொண்டிருந்தான். பள்ளிக்கூடம்தொடங்கடடும் முரளி, அகிலன், சுரேஷ் எல்லோரிட்டையும் கோழியைப் பற்றிச் சொல்ல வேண்டும். பள்ளிக் கூடம் எப்ப தொடங்கும்? பள்ளிக்கூடத்திலைஆமிக்காரர் காம்ப் போட்டிட்டாங்கள். தூரத்தில் நாய்கள் குரைக்கும் சத்தம் கேட்டது. முந்தி எண்டால் வாகனங்களிலை ஆமிக்காரர் போகேக்கை இவன் கை காட்டுவான் அவர்களும் திருப்பிக் கை காட்டுவார்கள். அப்பொழுதெல்லாம் இவனது தமையன் இவனைத் தடுப்பான். அவங்கள் பொல்லாதவங்கள் என்று தமையன் கூறுவான்.

கோயிலடியிலை அகதியாய்ப் போயிருக்கேக்கை தான் தமையன் சொன்னது இவனுக்கு விளங்கியது. குமரையா அப்பு. கச்சான்கார ஆச்சி, இவனுடன் படிக்கும் விசயனின் தகப்பன் எல்லோரையும் அவங்கள் தானாம் சுட்டிட்டு ரயர் போட்டுக் கொளுத்தினவங்கள். தோட்டத்துக்குள்ளாலை வாகனத்திலை போனதும் இவங்கள் தானாமே. நாய்கள் குரைக்கும் சத்தம் கிட்டவாகக் கேட்டது. இவனது வீட்டு நாயும் குரைக்கத் தொடங்கியது. தோட்டத்தின் பின் புறமிருந்து இராணுவத்தினர் வந்து கொண்டிருந்தனர். தலைப்பாகை அணிந்திருந்த ஒருவன் இவன் தோளில் கையை வைத்து ‘தம்பி’ என்றுவிட்டுச் சென்றான் அவர்கள் போகும் போது கிணற்றடியில் நின்ற மாதுளையில் ஆளுக்கு ஒவ்வொரு பழமாகப் பிடுங்கிக் கொண்டு போனார்கள். நேற்று இவன் பிடுங்கப் போக தாய் அவை நேர்த்திக்கு விட்டிருக்கு என்று கூறியது இவன் நினைவிற்கு வந்தது.

★ ★

கோழி இப்ப முட்டையிடத் தொடங்கியிருந்தது. முட்டைகளை ஒவ்வொன்றாகச் சேர்த்த கோபி தாயிடம் ''கோழியை அடைகட்டுவோமா'' என்று கேட்டான். தாய்க்கு சிரிப்பு வந்தது தாய் சிரித்துக் கொண்டு ''பண்ணைக் கோழி அடை கிடவாது. அதின்ரை முட்டை குஞ்சு பொரிக்காது'' என்று சொன்னாள். ''இந்தமுட்டைகளிலை அம்மா பிறந்த நாளுக்கு கேக் அடிப்பம்''

படலையைத் திறந்து கொண்டு வந்த பெரியம்மா சொன்னார். தன்ரை மகன் குமார் அண்ணாவுக்கு நேற்று ஆமி அடிச்சுப் போட்டாங்களாம். புக்கைகட்டியிருக்காம். கோழிச் சூப்பு வைத்துக் குடுத்தால் உடம்புக்கு நல்லதாம். கோபியின் தாய் இவன்ரை கோழியைக் குடுப்போமா? எனக் கேட்க கோபி வேண்டாம் என்று சொல்லி பெரிதாக அழுதான், பெரியம்மா இவன் ஆசைப்படுற கோழி தனக்கு வேண்டாம் என்று சொல்லி விட்டுப் போய் விட்டார்.

★ ★

இரவு ஒன்பது மணியிருக்கும். பக்கத்து வீட்டு கோழிகள் கத்தும் ஒலி பெரிதாகக் கேட்டது.

''மரநாய் ஆக்கும் தம்பி ஒருக்காப் பாப்பம்'' தாய் சொன்னார்.

கோபியும் தமயனும் வெளியில் வந்து பார்த்தனர். வேலிப் பொட்டுக்குள்ளால் மரநாய் ஒன்று முருங்கையை நோக்கி வருவது மங்கிய நிலவொளியில் தெரிந்தது அதன் கண்கள் பச்சையாய்த் தெரிந்தது. தமயன் அருகில் கிடந்த அலவாங்கால் மரநாயை நோக்கி எறிந்தான். மரநாய் ஓலமிட்டபடி ஓடியது. அலவாங்கு அதற்கு குத்தியிருக்க வேண்டும். தாய் விளக்கைக் கொண்டு வந்து பார்த்தாள். மரநாயில் இருந்து வழிந்த இரத்தம் நிலத்தில் ஊறிக் கிடந்தது. ''இனி மரநாய்ப் பிள்ளையர் இஞ்சாலைப் பக்கம் நெனைச்சு ககூடப் பாக்க மாட்டார். எறி நல்லாப் பட்டிட்டுது'' தாய் சொன்னார்.

''காட்டிலை இருந்து காட்டுக் கோழிகளை பிடிச்சுத் தின்னலாந்தானே இஞ்சை ஊருக்கு வந்தால் இனி இவருக்கு எறிதான் விழும்'' தமயன் சொன்னான்.

கோபி விளக்கைப் பிடித்து கோழியைப் பார்த்தான். அது மரத்தில் நடுங்கிக் கொண்டு நின்றது. ''பிடித்து உள்ளுக்கை அடைக்கட்டோ அண்ணா'' ''வேண்டாம் அது இனி இஞ்சாலைப் பக்கம் தலை காட்டாது.''

★ ★

ஆமிக்காரர் கோழிகளைப் பிடிக்கிறார்களாம். நேற்று பக்கத்து வீட்டிலை ரெண்டு கோழிகளைப் பிடித்துக் கொண்டு போய் விட்டனர்.

நாய்கள் குரைககும் சத்தம் தூரத்தில் கேட்டது. இவன் கடகத்தை கையில் எடுத்துக் கொண்டு கோழியை பிடிக்கப் போனான்.

''வளவுக்குள்ளாலை வாறவங்கள் கடகத்தோடை கோழியைக் கொண்டு போடுவாங்கள். நீ கோழியைத் திறந்து விடு அது எங்கையாலும் ஓடும்'' என்று சொன்ன தமயன் தோட்டப் பக்கம் போனான். கோபி கோழியை விட்டு விட்டு முன்பக்கம் போனான். படலையைத் திறந்து கொண்டு இராணுவத்தினர் வந்தனர். அவர்கள் மது போதையில் இருந்தனர்.

முன்னால் வந்த தலைப்பாகை அணிந்தவன் கையில் ஒரு உரப்பையுடன் வந்தான். அதற்குள் கோழிகள் இருக்க வேண்டும். உரப்பையின் அடிப்பக்கத்தில் இரத்தம் கசிந்தது அவனைத் தொடர்ந்து ஒருவன் கையில் தடியுடன் வந்தான். பின்னால் வந்தவன் கையில் இருந்த அரிசியைக் கொட்டி ''வா வா வா வா,'' என்று கத்தினான். எங்கேயோ நின்ற கோழி அரிசியை நோக்கி ஓடி வந்துது. கோபிக்கு நெஞ்சு பகென்றது. தடியுடன் நின்றவன் தடியால் ஓங்கி எறிந்தான். கோழி கத்திக் கொண்டு உயர எழுந்து கீழே விழுந்தது தலைப்பாகைஅணிந்தவன் கோழியை உரப்பையினுள் தூக்கிப் போட்டுக் கொண்டு நடந்தான்.

இவன் விம்மி விம்மி அழுதான். ''கோபி, அழாதை பண்ணையிலை வேறை வாங்கித்தாறன்'' தாய் சொன்னார். இவன் அழுகையை அடக்க மாட்டதவனாய் தகப்பனை நோக்கி ஓடினான். அவர் ''உனக்கு ஒருசோடி முயல் வாங்கித்தாறன் கோழி எண்டாத்தானே அவங்கள் பிடிப்பங்கள்'' இவன் அழுது கொண்டு தோட்டப் பக்கம் போனான்.

''அண்ணா கோழியை பிடித்துக் கொண்டு போட்டாங்கள்''.

பாத்தி கட்டிக் கொண்டு நின்ற தமயன் மண்வெட்டியைக் கீழே போட்டுவிட்டு நிதானமாய்ச் சொன்னான். ''மரநாய்களைத் துரத்த வேண்டும்'' ஒன்றும் புரியாதவனாய் கோபி அழுகையை அடக்கிக் கொண்டு கண்ணீரினூடு தமயனின் முகத்தை அண்ணாந்து பார்த்தான். அது தெளிவாய் இருந்தது. இவனுக்குப் புரிய இன்னும் ஓரிரு நாட்கள் போதும்.''

## புதிய உலக

ஏறத்தாழ 100 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான மர வியாபாரத்தையோ, அல்லது 40க்கு மேற்பட்ட தாய்லாந்து வர்த்தக நிறுவனங்கள் 300க்கு மேற்பட்ட இரத்தினக்கல் சுரங்களின் மூலம் பெறும் லாபத்தையோ சுலபத்தில் இழக்க தாய்லாந்து இணங்தும் என எவரும் நம்பவில்லை. எனவே கம்போடிய அமைதிக் கனவு கலைய ஆரம்பித்து விட்டது.

அங்கோலாவின் கதையையும் பார்க்கலாம். 16 வருடங்கள் கொடிய உள் நாட்டுப் போர் நடந்த நாடு சோவியத்தின் ஆதரவை இழந்த எம் பி எல். ஏ. (MPLA) அரசின் தலைவர் தொல் சாள் டோசும், அமெரிக்கா, தென்னாபிரிக்க ஆதரவை இழந்த யுனிட்டா குழுவின் யோனாஸ் சவிம்புயும் ஐ நாவின் தரகர் முயற்சியால் 1991ஆம் ஆண்டு போரை நிறுத்தி உடன்பாடு கண்டன. இங்கும் இரு அணியினரும் தமது இராணுவங்களை ஓரணியாக்கி தேர்தலில் நின்று சனநாயக வழியில் செயற்பட சம்மதித்தன. சென்ற வருடம் செபடெம்பரில் தேர்தலும் நடந்தது. சவிம்பி தோற்றுப் போனார். உடனடியாக தனது இராணுவ தளபதிகளை ஒன்று பட்ட இராணுவ அணியிலிருந்துவிலக்கிதனது30,000பேர் கொண்ட படையை போர் செய்ய உத்தரவிட்டார். எனவே மீண்டும் போர் தொடங்கிவிட்டது. ஐ நாவின் பார்வையாளர் இருவர் இப்போரில் இடையில் அகப்பட்டு இறந்து போயினர் தனது அலுவலகங்களின் நிலை மிக உயிராபத்தில் உள்ளதாக அங்கோலாவில் உள்ள ஐ நா பொறுப்பாளர் அலறுகின்றார் பாதுகாப்பு சபையில் வேண்டுகோள், எச்சரிக்கை எதனையும் யுனிட்டா தலைவர் காதில் போடுவதாக தெரியவில்லை.

ஆப்கான் கதையும் அதே கதை. தெரிந்த கதை ஐ நா. வின் பேச்சை நம்பி பதவியிறங்க சம்மதித்த முன்னாள் அதிபர் நஜிபுல்லாவை எப்படிக் காப்பாற்றி வெளியே கொண்டு வருவது என கடந்த ஆறு மாத காலமாக ஐ. நாவிற்கு தெரியவில்லை. மிகச்சிறந்த உடன்படிக்கை என்று பாராட்டப்பெற்றஎல். சல்வடோரின் அமைதி உடன்பாடே மீண்டும் கேள்விக்குறியாகிவிட்டது. ஒப்புக் கொண்டபடி இராணுவத்தில் மாற்றங்கள் செய்ய வலதுசாரி கிறிஸ்டியானோ தலைமையிலான அரசு மறுப்பதால் FMLN போராளிக்குழு தனது மிகுதி ஆயுதங்களை ஒப்படைக்க மறுத்து விட்டது. நம்பிக்கை துரோகம் என ஐ. நாவைப் பார்த்து குற்றம் சாட்ட ஐ. நா கையை பிசைந்து கொண்டு நிற்கின்றது. பாலஸ்தீனியப் பிரச்சினையில் ஐ. நாவின் ஓர வஞ்சனை உலகறிந்த கதை 200 வது வரிசையில் ஐ நா. பாதுகாப்பு சபை தீர்மானங்களிலிருந்து இன்று 700வது வரிசையில் உள்ள தீர்மானம் வரை இஸ்ரேல் காலில் போட்டு மிதித்த தீர்மானங்கள் ஏராளம் பாதுகாப்பு சபை தீர்மானங்களை மீறிய ஈராக்மீது தண்டனை. இஸ்ரேலுக்கு ஆதரவு. இங்கேஅமெரிக்க, மேலைத்தேய நலன்கள் ஐ நாவின் புதிய ஒழுங்கில் எவ்வாறு முதன்மைப்படுத்தப்படுகின்றன என்பது மிகத்தெளிவாக அம்பலப்படுத்தப்படுகின்றன.

இன்னொரு மிக நீண்ட மோசமான உள்நாட்டுப் போரை முடிவுக்கு கொண்டு வந்த உடன்பாடு கடந்த ஒக்டோபர் மாதம் இத்தாலியின் றோமில் ஐ. நாவினால் மேற்கொள்ளப்பட்டது மொசாம்பிக் நாட்டின்ஜனாதிபதி சிசானோவிற்கும்றினாமோ கிளர்ச்சிக்குழு தலைவருக்கும் தலக்காமாவிற்கும் இடையில் ஏற்பட்டது. அங்கோலாபோலவே இங்கும் ஏறபாடுகள் மொசாம்பிக் அரசின் 75,000 பேர் கொண்ட படையையும் றினாமோவின் 30,000 பேரையும் கலைத்துவிட்டு புதிதாக இரு அணியினரின் சமபங்கைக் கொண்ட புதிய இராணுவ அணியை உருவாக்குவதே முக்கியமான உடன்படிக்கையின் சரத்து. இது எவ்வாறு நிகழப் போகிறது என்பதை உலகமே பார்த்துக் கொண்டிருக்கிறது. அங்கோலாவில்நடந்ததுபோல் மொசாம்பிக்கிலும் நடக்கக் கூடாதென ஏலவே அரசியல் அறிஞர்கள் எச்சரிக்கைக் குரல் எழுப்பியுள்ளனர்.

இத்தகைய நிலையில் ஐ. நா. வின் சர்வதேச மதிப்பு எவ்வளவு காலம் நீடிக்கும் என்பதே கேள்வி. தொடர்ந்த ஐ. நா. வின் அமைதிப்பணி எவ்வாறு அமையும் என்பதற்கு வரலாறே விடை சொல்லும்.

# முப்படை தலைமைச் செயலகத்தை அநுராதபுரத்திற்கு மாற்றியது ஏன்?

இதுவரைநாளும் கொழும்பு நகரில் இயங்கிவந்த கூட்டுப்படைத் தலைமையகம் இப்போது அநுராதபுரத்திற்கு மாற்றப்பட்டுவிட்டது.

சண்டைக்களத்துக்கு அருகில் இராணுவ தலைமைப் பீடம் செல்வதால் தளபதிகள் தமக்கு அருகிலேயே இருக்கின்றனர் என்ற உணர்வு இராணுவத்திடம் ஏற்படும், அதனால் படையினரின் மனஉறுதி அதிகரிக்கும், அது புலிகளுடனான போரை வெல்ல இராணுவத்திற்கு உதவும்.. என்று அரசு இடமாற்றத்திற்கு வியாக்கியானம் செய்துள்ளது.

இன்றைய நவீனபோர்முறையில் தொலைதொடர்பு கருவிகளின் பங்கு மிகப்பெரியது. அவைதான் போரின் தலைவிதியை தீர்மானிக்கின்றன என்றால் அது மிகையாகாது.

புலிகளின் இராணுவ வல்லமைக்கு அவர்கள் வைத்திருக்கும் நவீன தொலைதொடர்பு கருவிகளும் ஒரு காரணம் என இந்திய இராணுவ அதிகாரிகளே கூறியுள்ளனர்.

இந்திய ஆக்கிரமிப்புக்காலகட்டத்தில் தலைவர் பிரபாகரன் அவர்கள் முல்லைத்தீவுக் காட்டுக்குள் இருந்தபடியாழ்ப்பாணத்திலும் மட்டக்களப்பிலும் மற்றைய இடங்களிலும் நடந்த சண்டைகளை வழிநடாத்தி போரை தீவிரப்படுத்தினார்.

அதுபோல இன்று. யாழ். குடாநாட்டிற்குள் இருந்தபடி தான் தமிழீழம் எங்கும் நடைபெறும போராட்ட நடவடிக்கைகளை அவர் வழி நடாத்துகின்றார்.புலிகள் இயக்கத்திற்கும் சிறிலங்கா அரசுக்கும் இடையில் முன்னர் கொழும்பில்நடைபெற்ற பேச்சுக்களின் போதும் புலிகள் தம்முடன் கொண்டுசென்ற தொடர்பு சாதனங்கள் மூலமே தலைமைப்பீடத்துடன் தொடர்பு கொண்டு ஆலோசனைகளையும், பேச்சின பெறுபேறுகளையும் உடனுக்குடன் பகிர்ந்து கொண்டனர் என்பதுஎல்லோரும் அறிந்த ஓர் உண்மை.

ஆனால், புலிகளிடம் இருக்கும் தொலை தொடர்பு சாதனங்களின் சக்தியை விட சிங்களப்படைகளிடம் இருக்கும் தொலைதொடர்பு சாதனங்களின் சக்தி அதிகமானது.

வட -கிழக்கில் நடைபெறும் சண்டையை- இதுவரைநாளும் செய்தது போல- தொலைதொடர்புக் கருவிகள் மூலம் கொழும்பில் இருந்தபடி கூட்டுப்படைத் தலைமையகம் நடாத்துவதற்கும், இனிமேல் அநுராதபுரம் சென்று நடாத்துவதற்கும் என்ன வேறுபாடுண்டு?

பலாலியிலும்.முல்லைத்தீவிலும், மன்னாரிலும் பதுங்குகுழிக்குள்ளும். மண்மூடை அரண்களுக்குள்ளும் நின்று போர் புரியும் சிங்களப்படை வீரர்களுக்கு கூட்டுப் படைத்தலைமையகம் அநுராதபுரத்துக்கு மாற்றப்பட்ட உடன் எப்படி மனஉறுதி அதிகரிக்கும்?

200 மைல்களுக்கு அப்பால் இருந்த உயர்தளபதிகள் 100 மைல் தூரத்திற்கு வந்துவிட்டார்கள் என்றசெய்தி அரசு கூறுவதைப்போல தளபதிகள் தம்முடனேயே இருக்கின்றார்கள் என்ற உணர்வை படைவீரர்களுக்கு ஏற்படுத்துமா?

பண்டைய காலத்தில்.போர் நடைபெறும்போது அதன் பெறுபேறுகளையும், அதற்குரிய ஆலோசனைகளையும் மன்னனிடம் பெறுவதற்காக ஓடிச்சென்று செய்தி பரிமாறுவது வழமை அப்படியான முறையிலேயே சிங்களப்படை இங்கும் செய்தியை பரிமாறிக்கொள்கின்றது என்றால் அரசு கூறுவதைப்போல கொழும்பிலிருந்து போரை நடாத்துவதை விட அநுராதபுரத்திலிருந்து நடாத்துவது சிறந்ததுதான்.

உண்மையில் கூட்டுப்படைத் தலைமையகத்தின் இடமாற்றத்திற்கு காரணம் அதுவல்ல.

இந்தத் தலைமையக இடமாற்றத்துடன் சிங்கள உயர் தளபதிகளின் பாதுகாப்பும், சிங்கள உயர் அரசியல் பிரமுகர்களின் நலன்களும் அடங்கியிருந்தன. அத்துடன் சிங்கள ஆளும்வர்க்கமும் - உயர்குழாமும் அதிகளவில்வாழும் தலைநகர் கொழும்பை பதற்றமில்லாது, பாதுகாப்பாக வைத்திருக்கவும் இவ் இடமாற்றம் உதவும்.

அண்மைக்காலமாக கொழும்பில் தற்கொலை வீரர்களின தாக்குதல்கள் அதிகரித்துள்ளன.

இதுவரை, முன்னாள் பாதுகாப்பமைச்சர்ரஞ்சன்விஜேரத்தினாவும், முன்னாள் கடற்படைத்தளபதி அட்மிரல் கிளான்சி பெர்னாண்டோவும் இதற்குப் பலியாகிவிட்டனர். அத்துடன் கூட்டுப்படைத் தலைமையகமும் ஒரு தற்கொலைக் குண்டுத்தாக்குதலுக்கு உள்ளாகி பலத்த இழப்பை சந்தித்தது.

மேலும் - மேலும்குண்டுகள் கொழும்பு மாநகரில் வெடிக்கலாம் என சிறிலங்காவின் புலனாய்வு அறிக்கைகள் எச்சரிக்கை செய்துள்ளன. முக்கிய சில அரசியல் பிரமுகர்களும் - உயர் இராணுவ தளபதிகள் உட்பட மேலும் சில கேந்திரமுக்கியத்துவம் வாய்ந்த இலக்குகளையும் தற்கொலை வீரர்கள் தேர்ந்தெடுக்கக்கூடும் என்ற அச்சம் கொழும்பு நகரெங்கும் நிலவுகினறது. இதனால் கொழும்பின் இயல்புநிலை மோசமாகச் சீரழிந்துவிட்டது கொழும்பில் வாழ்க்கைநடாத்தும் சிங்கள உயர்குழாமும், ஆளும்வர்க்கமும் பெரிதும் மனக்கிலேசம்அடைந்து அமைதியிழந்து-அல்லலுறுகின்றனர். இது பல்வேறு வகையிலும் அரசுக்கு ஒரு தலையிடியைக் கொடுத்துள்ளது.

**எல்லாளன்**

தற்கொலை வீரர்களின் பிரதான இலக்கு இதுவரை இராணுவ உயர்பீடமாகவே இருந்துவந்துள்ளது. எனவேதான் படைத்துறையின் உயர்பீடத்தை கொழும்பிலிருந்து வேறு எங்காவது ஓர் இடத்திற்கு மாற்றிஉயர் தளபதிகளை பாதுகாப்பதுடன்... அவர்களது இழப்பால் படையினர் சோர்வடைவதையும் தடுக்க முயற்சிக்கின்றது. அத்துடன் கொழும்புநகரையும், கொழும்பு நகரத்தில் குவிந்து கிடக்கும் ஆட்சி இயந்திரத்தையும்- அவ் ஆட்சிஇயந்திரத்தைஇயக்கும் சிங்கள உயர்குழாத்தையும் - ஆளும்வர்க்கத்தையும் பாதுகாக்க சிறிலங்கா அரசு முயல்கின்றது. அதேவேளை கொழும்பு நகரில் இயல்புநிலையை கொண்டுவருவதன் மூலம் வெளிநாட்டு முதலீட்டாளர்களது வருகையை ஊக்குவிக்கலாம், ஆட்சிநிருவாகத்தையும் தங்குதடையின்றி நடாத்தலாம் என்றும் எண்ணியே இந்த இடமாற்றத்தை அரசு அறிவித்தது

இந்த இடமாற்றத்திற்கு இன்னுமொரு காரணி உண்டு. கொழும்பு நகரில் சிங்களவர்களுடன்தமிழர்களும்-முஸ்லிம்களும் கலந்து வாழ்கின்றனர். எனவே தமிழ்தற்கொலை வீரர்கள் தங்களைஉருமறைத்துக் கொள்ள கொழும்பு சூழல் உகந்ததாக உள்ளது. இந்த நிலையை இல்லாமல் செய்வதற்காகவே தமிழர்களது வாசனையேயில்லாத அநுராதபுரத்திற்கு படைத்துறையின்தலைமைப்பீடத்தை அரசு மாற்றியுள்ளது

இவ்விதம் ஆட்சிபீடத்தினரும், இராணுவஉயர் தளபதிகளும் தம்மையும் தங்களது அதிகாரங்களையும் நலன்களையும் பாதுகாத்துக் கொள்வதற்காக கூட்டுப்படைத் தலைமையகத்தை இடம் மாற்றிவிட்டு போரை தீவிரமாக நடத்தவே அம்மாற்றம் என சிங்களமக்களை ஏமாற்ற முயன்றுள்ளனர்.

இது இவ்விதமிருக்க, தலைவர் பிரபாகரன் அவர்கள் கொழும்பு அங்கிலிக்கன் ஆயர் அதி-வண கென்னத் பெர்னாண்டோ ஊடாக விடுத்த சமாதானத்திற்கான நல்லெண்ண சமிக்கையை சிங்கள தேசம் மதித்ததாகத் தெரியவில்லை. சிங்கள தேசத்திலிருந்து வெளிவரும் பத்திரிகைகள் மூலம் இதை தெளிவாகக் காணக் கூடியதாக உள்ளது. அரசியல் தலைவர்கள். இராணுவ தளபதிகள், பத்திரிகை ஆசிரியர்கள் மதத் தலைவர்கள், புத்தி ஜீவிகள் என்று சிங்கள தேசத்தின் அனைத்துத் தரப்பினரும் முதலில் புலிகளை இராணுவ ரீதியாகத் தோற்கடிக்க வேண்டும் என்பதையே வலியுறுத்துகின்றனர்.

தமிழர்கள் தமது தேசிய தனித்துவத்தை - தேசிய பலத்தை பாதுகாக்க முயலும் விருப்பத்தை சிங்கள தேசம் அடியோடு நிராகரிக்கின்றது.

வடக்கு - கிழக்கு பிரிக்கப்பட வேண்டும் என்பதில் சிங்களக் கட்சிகள் ஒற்றுமையாகவே செயற்படுகின்றன. அதன் நோக்கம் கிழக்கை சிங்கள மயமாக்கி தமிழர்களின் தேசிய பலத்தை குறைப்பதுதான்.

ஆனால் வடக்கென்றும், கிழக்கென்றும் தமிழர் தாயகத்தை பிரிக்க தலைவர் பிரபாகரன் உடன்படமாட்டார். எந்த வகையில் என்றாலும் தமிழரின் தேசிய பலம் சிதைவுறுவதை அவர் அனுமதிக்க மாட்டார் என்பது சிங்கள அரசிற்கு நன்கு தெரியும்.

ஆகவே புலிகள் இயக்கம் மீது இராணுவ நெருக்கடியை பிரயோகித்து அவர்களது இராணுவ பலத்தை உடைத்து புலிகள் இயக்க தலைமைப்பீடத்தை பணியச் செய்ய வேண்டும் என சிங்கள தளபதிகள் விரும்புகின்றனர்.

ஆனால் பெரும் பெரும் இராணுவ நெருக்கடிகளை எவ்வெப்போது புலிகள் இயக்கம் சந்தித்ததுவோ. அப்போதெல்லாம் அது பிரமாண்டமான உறுதியையும் - பணிந்து போகாத கடும் போக்கையுமே வெளிப்படுத்தியுள்ளது. இது வரலாற்று உண்மையாகும்.

புலிகளின் வரலாற்றில் இழப்புகளும், அழிவுகளும் அவர்களை என்றும் முடக்கியதில்லை. மாறாக இழப்பிலிருந்து புத்துயிர்ப்புடனும்- புதிய வேகத்துடனும் எழுபவர்கள் தான் புலிகள்.

இந்திய ஆக்கிரமிப்பின் போது இந்தியப் படைகள் புலிகள் இயக்கத்தை இராணுவ ரீதியாக பலவீனப்படுத்தியிருந்த போதும் புலிகள் இயக்கமே அழிக்கப்பட போகிறது என்ற அபாயம் இருந்தும் தலைவர் பிரபாகரன் அவர்கள் இந்திய அரசிடம் பணிந்து போகவில்லை. மாறாக தனது உயிரையும் பொருட்படுத்தாது இழந்த இராணுவ பலத்தை மீண்டும் கட்டியெழுப்புவதிலேயே அவர் கண்ணும் கருத்துமாக இருந்தார்.

ஏனெனில் புலிகள் இயக்கத்தின் இராணுவ பலம் தான் தமிழர்களின் தேசிய பலத்திற்கு முதுகெலும்பு போன்றது என அவர் கருதுகின்றார். அந்த இராணுவ பலம் தான் தமிழீழ மக்களுக்கு அரசியல் பலத்தை வழங்க வல்லது என உறுதியாக நம்புகின்றார்.

இந்த நிலையில் புலிகளை இராணுவ ரீதியாக தோற்கடித்து விட்டு அரைகுறைத் தீர்வுகளை வழங்கி போரை முடிவுக்கு கொண்டு வந்துவிடலாம் என்ற சிங்கள தளபதிகளின் நம்பிக்கை நடைமுறைச் சாத்தியமற்ற ஒன்று. எனவே அதைக் கைவிட்டுவிட்டு தலைவர் பிரபாகரன் விடுக்கும் நல்லெண்ண சமிக்கையை நல்ல முறையில் பயன்படுத்துவதுதான் சிறிலங்கா அரசுக்கும் தமிழ் மக்களுக்கும் சிங்கள மக்களுக்கும் நன்மையை அளிக்கும்.

## தமிழிசையின்

லும், பாட்டு இயற்றுவதிலும் ஏதோ ஒரு வகையில் வேர் கொண்டிருந்தார்கள் பெரியானைக் குட்டியின் சீடர் நயினாதீவுச்சாமியார், வீரகாளி அம்மன் கோவில் நாகலிங்கம் சுவாமி எங்கள் பரம்பரையில் புகழ்பெற்றவர்கள். எனது முந்தையரின் கலைப்பாரம்பரியத்தை உதறி விடாமல் தொடருகிறேன். பண்ணோடு சம்பந்தப்பட்ட மேலைத்தேச இசைத் தொடர்பு பற்றியும் ஆராய்ந்து வருகிறேன்.

★ திருப்பாவையில் உள்ள சில பாசுரங்களில் சிருங்கார ரஸம் (EROTIC SENSE) காணப்படுகிறது இவற்றை அல்லது இவை போனற பண்களைக் கச்சேரி பண்ணுவது பற்றி உங்கள் அபிப்பிராயம்-

சிருங்கார ரஸம் மூலமும் ஞானமார்க்கத்தை எட்டலாம் என்பதால் இவ்வகையான உணர்வுடன் கூடிய பாடல்களும் கச்சேரிகளில் இடம்பெறலாம். இவ்வகையான சிறப்புடைய பாடல்கள்திருமுறையிலும், திருவாய் மொழியிலும் உள்ளன. எவ்வகையிலும், சிருங்கார உணர்வுடைய பாடல்கள் எப்பொழுதும் ஒதுக்கப்படவில்லை. என்பது குறிப்பிடத்தக்கது.

★ ஆய்வுக்கான மூலங்கள் இருந்தும் இலங்கையில் பண்ணிசை, ஆய்வு ரீதியாக வளரவில்லை. ஏன?

ஒரு விஷயத்தை அதன் ரிஷி மூலம் வரை ஆய்வு செய்கிற பழக்கம் தமிழர் மத்தியில் அருகிப் போனது பண்ணிசை பற்றிய ஆய்வு முழுமையாக மேற்கொள்ளப்படாதற்குரிய காரணங்களில் ஒன்றாகும். மேலும் நல்லை ஆதீனம் முறைசாராவகையில்பண்ணிசையைவளர்த்து வருகிறது. ஆனால் ஆய்வுப் பணியில் ஆதீனம் இதுவரை காலடி எடுத்து வைக்கவில்லை. பண்ணிசையின் முக்கியத்துவம் அண்மைக் காலத்தில் தான் உணரப்பட்டுள்ளது. வடஇலங்கை சங்கீத சபை பண்ணிசைகற்கை நெறியை ஆரம்பித்துக் கடந்த பன்னிரண்டுவருடங்களிலே ஏழுபேர் கலா வித்தகர் பட்டம் பெற்றுள்ளார்கள். முதன் முறையாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பண்ணிசைக்கான துறை ஆரம்பிக்கப்பட்டுள்ளது இது ஓர் ஆய்வுமையமாகவும் மறைந்து போன தமிழ் இசை மரபின் செயற்திறன் களமாகவும் அமையும் என்பது எனது நம்பிக்கை. தமிழ் மக்களின் ஒத்துழைப்பு இதற்குப் பூரணமாக உண்டு.

★ ஈழத்துக்குப் பண்ணிசை அவசியம் தானா?

அத்தியாவசியமானதே! தமிழை அன்னை மொழியாகக் கொண்டு அவ் உயர்ச்சியில் வெற்றி காண்பவர்கள் ஈழ மக்கள். யாழ்ப்பாணம் என்ற பெயர் தமது பண்பாட்டை உலகில் நிலை நிறுத்தும். யாழ்ப்பாணம் தொடங்கி பாணர் முல்லை (பாணமுல்ல) வரையுள்ள இருபத்தொன்றுக்கு மேற்பட்ட புராதன ஊர்ப் பெயர்கள் ஈழத்தில் பண்கொண்டிருந்த நிலைப்பாட்டைத் தெரிவிப்பன. நமது பூர்வீக இயக்கர், நாகர் வரலாற்றுடன் பரிப்பாட்டை இயற்றியவர்கள் தொடர்பு பெற்றிருப்பதை வரலாறு எமக்குக் கூறுகின்றது. கந்தரோடை, மாந்தோட்டம், வல்லிபுரம், பூநகரி, பச்சிலைப்பள்ளியுடன் சோழர்கால ஆய்வுகளும் விரிவுபடுத்தப்படவேண்டிய அவசியம்எழுகிறது. ஆய்வுகளின் மூலம் புதிய அர்த்தங்கள் தெரியவருவதோடு தமிழர் வாழ்வில் பண்ணிசை வகித்தபங்கும்தெளிவாகும். பொதுவாகத் தமிழ் இசைக்கும், ஈழத்தமிழர் இசைக்கும் கட்டியம் கூறி நிற்பது பண்ணிசையே. அண்மையில் கந்தரோடையில் கிடைத்த யாழ்உரு இதனைஉணர்த்துகிறது.

★ குருகுலமுறையில்இசைபயில்வதற்கும், கல்வி நிலையங்களில் வகுப்பறைக் கற்பித்தல் முறைமூலம் இசை பயில்வதற்கும் உள்ள வித்தியாசங்கள் எவை?

குருகுல முறையில் பயில்வதினால்இசைப்பாரம்பரியத்தில் உள்ள நுணுக்கங்களைத்தொடர்ச்சியாகபயிலலாம் என்று கூறலாம்.வகுப்பறைக் கற்பித்தல் முறையில் சாஸ்திரீய நுணுக்கங்களை விரிவாக ஆராய்ந்து கற்றுக் கொள்ள வாய்ப்பு வசதிகள் உள்ளன, ஆனால் செயல்முறை ஓரளவுதான். ஒட்டுமொத்தமாகப் பார்த்தால் குருகுலக் கற்றல் சார்ந்த அனுபவத்தைவிட மற்றெல்லா முறைகளிலும் கற்றல் நிகழ்வது குறைவெனலாம். தற்காலிக கல்வி முறை தொழில் நோக்கை அடிப்படையாகக் கொண்டிருப்பதால், இசை பற்றிய சாஸ்திரீய அறிவைவிரிவாக்குவது பயன் பொருத்தமானது கற்றலுக்குப் புதிய தளங்களும் அவசியமாகின்றன அவை பல்கலைக் கழகமையங்களாகவே இருக்க முடியும்.


★ குருவின் பாணியைப் பின்பற்றுகிறீர்களா? அல்லது உங்களுக்கென்று ஒரு பாணியை அமைத்து பாடி வருகிறீர்களா?

திருமுறைக் கலாநிதி இசைப் பேராசிரியர் எம். சுப்பிரமணிய முதலியார், சிதம்பரம் எம். கனகசபைப் பிள்ளை. கர்னாடக இசை

(7-ம் பக்கம் பார்க்க)

# வீரவணக்கம்

## உலகத் தமிழினத்தின் மத்தியில்
## தாயக விடுதலையுணர்வை வளர்த்த



மூத்த தளபதியும்,
விடுதலைப் புலிகளின்
சர்வதேசவிவகாரங்களுக்கு
பொறுப்பாளருமான

# கேணல் கிட்டு

**(சதாசிவம் கிருஷ்ணகுமார்)**

மற்றும்

லெப்.கேணல் குட்டிசிறி
மேஜர் வேலன்
கப்டன் குணசீலன்
கப்டன் றொசான்
கப்டன் ஜீவா
கப்டன் நாயகன்
லெப். தூயவன்
லெப். அமுதன்
லெப். நல்லவன்
ஆகியோருக்கு

**எமது வீர அஞ்சலிகளை**
**செலுத்துகிறோம்**

**அனைத்துலகச் செயலகம்**
லண்டன்
பெரிய பிரித்தானியா

**தமிழர் ஒருங்கிணைப்புக் குழு**
மெல்பேர்ன்
அவுஸ்திரேலியா

**தமிழீழ விடுதலைப் புலிகள்**
கொப்பன்கேகன்
டென்மார்க்

**தமிழர் ஒருங்கிணைப்புக் குழு**
பரிஸ்
பிரான்ஸ்

**தமிழர் நேச கூட்டமைப்பு**
குமாப்பார்ச்
ஜேர்மனி

**உலகத் தமிழர் இயக்கம்**
டொரன்ரோ
கனடா

**தமிழர் ஒருங்கிணைப்புக் குழு**
பலர்மோ
இத்தாலி

**தமிழர் ஒருங்கிணைப்புக் குழு**
டென்காக்
நெதர்லாந்து

**தமிழர் ஒருங்கிலைப்புக் குழு**
ஒஸ்லோ
நோர்வே

**தமிழர் ஒருங்கிணைப்புக் குழு**
சூர்
சுவிற்சிலாந்து

**உலகத் தமிழர் ஒருங்கிணைப்புக் குழு**
நியூயோர்க்
ஐக்கிய அமெரிக்கா

(சி-5893)

## வவுனியாவில் பாக். டாக்டர்கள்

பாகிஸ்தானிலிருந்து வந்துள்ள இரண்டு டாக்டர்கள் வவுனியா ஆதார வைத்திய சாலையில் பணியாற்றுவதற்கென நியமிக்கப்பட்டுள்ளனர். யுத்தமுனையில் காயமடையும் படையினருக்கு சிகிச்சை அளிப்பதற்காக பாகிஸ்தான் பத்து டாக்டர்களை அனுப்பியிருப்பது தெரிந்ததே. அண்மையில் வந்து சேர்ந்த இப்பத்து டாக்டர்களில் இருவரே வவுனியாவில் பணியாற்றுவதற்கென நியமிக்கப்பட்டுள்ளனர்.


**ஈழநாதம்**

**3ஆம் ஆண்டு நிறைவுப் போட்டி**

**சிறுகதை, கவிதை, கருத்துப்படம்**

முதலாம் பரிசு: தங்கப்பதக்கத்துடன் கூடிய 1500ரூபா ரொக்கப் பணம்.

இரண்டாம் பரிசு: 1500 ரூபா ரொக்கப் பணம்

மூன்றாம் பரிசு: 1000 ரூபா ரொக்கப் பணம்.

போட்டியில் பங்குபற்றி பரிசில்களை வெல்லுங்கள்

முடிவு திகதி: 05/02/1993



**கலைவர்த்தகக் கல்லூரி**

**C.C.A.**

வெலிங்டன் சந்திக்கருகாமை
யாழ்ப்பாணம்

**வார இறுதி வகுப்பு**

1992 க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் தோற்றிய மாணவர்களுக்கான துரித மீட்டல் வினாவிடை வகுப்பு

ஆரம்பம் :

**30-1-93 சனி, பி.ப. 1.00மணி**

**வர்த்தகம் : திரு, இ. இரட்ணம்**

குறிப்பு : 1992 நவம்பரில் இருந்து செவ்வாய், வியாழன் ஆகிய நாட்களில் வர்த்தகம் பகல்நேர வகுப்பு நடைபெறுவதில்லை. ஆகையால் சனி, ஞாயிறு ஆகிய இருநாட்களில் மட்டுமே நடைபெறும்.

நிர்வாகி

(சி-5890)


**45 ஆம் நாள் திதியும் நினைவு நாளும்**



| வீரப்பிறப்பு | வீரச்சாவு |
|---|---|
| 23 — 08 — 1963 | 16 — 12 — 1992 |

**லெப். சிற்றம்பலம் (அப்துல்லா)**
நடராசா சந்திரகுமார்)

29. 01. 93 இன்று சகபோராளிகளையும் மதிய போசனத்தில் கலந்து கொள்ளுமாறு அழைக்கின்றோம்.

27. செம்மணி வீதி,
நல்லூர்.

-உறவினர்கள்

(4170)



### வலி. வடக்கில் இராணுவத்திடம் சிக்கிய

# 13 பொதுமக்கள் பற்றி தமக்கு எதுவும் தெரியாதாம்

### படையினர் கைவிரிப்பு

(குருநகர்)

இராணுவ ஆக்கிரமிப்பிற்கு உட்பட்டிருக்கும் காங்கேசன் துறைப் பகுதியில் படையினரிடம் சிக்கிக்கொண்ட பொது மக்களில் 13 பேரைப்பற்றி தமக்கு எதுவும் தெரியாதுஎன படையினர் கைவிரித்துள்ளனர்

இராணுவ ஆக்கிரமிப்பு ஏற்பட்டபின் அப்பகுதிக்கு சென்று வந்த சர்வதேச செஞ்சிலுவைச்சங்கத்தினரிடம் கையளிக்கப்பட்ட பெயர்ப் பட்டியலில் இருந்தவர்களில் குறிப்பிட்ட 13 பொதுமக்களுமே தற்பொழுது தம்மிடம் இல்லை என படையினர் கூறியுள்ளனர்.

அந்தப் 13 பேர்களது பெயர் விபரங்களையும் நடுநிலைய இயக்குனர் வண. ம. இ. பயஸ் அடிகளார் வெளியிட்டுள்ளார்.

பெயர் விபரங்கள் வருமாறு: கந்தையா தம்பிப்பிள்ளை (வயது 82), கந்தையா தங்கராசா அல்லது திருநாவு (வயது 65), செல்லையா தனபாலு அல்லது சிக்கி (வயது 30), வைரமுத்து பரமநாதன் அல்லது பரமகுரு (வயது 44), ஆரோக்கியநாதர் மைக்கேல் உடையார், பலாலி (வயது 85), இராமலிங்கம் ஆச்சிமுத்து (வயது 76), இளையதம்பி இரத்தினம் குரும்பசிட்டி (வயது 66), பொன்னம்மா சிவரெத்தினம் (வயது 58), வல்லிபுரம் செல்லம்மா, தையிட்டி (வயது 61), வல்லிபுரம் பத்மநாதன் தையிட்டி (வயது 29), கணபதிப்பிள்ளை மருதலிங்கம் அல்லது வைரவப்பிள்ளை (வயது 42), வீரசத்தி கதிரிப்பிள்ளை தையிட்டி (வயது 63), சிவசம்பு கந்தையா (வயது 62). [21]

### வலி-வடக்கு, மேற்கு பகுதியில்

# இராணுவ ஆக்கிரமிப்பின் பின் மரணமான 24 பேர் விபரம்

(குருநகர்)

கடந்த ஆண்டு (1992) ஆகஸ்ட் 20 ஆம் திகதி சிறிலங்கா இராணுவத்தினர் அளவெட்டி, மாதகல், இளவாலை, பண்டத்தரிப்பு பகுதிகளை ஆக்கிரமித்த பின்பு நோய்வாய்பட்டும், தகுந்த சுகாதார வசதி-உணவு இன்றியும் மரணித்துள்ள 24 பேர்களின் விபரங்கள் வருமாறு:

மாதகல் பகுதியில் இறந்த ஒன்பது பேர்கள் முருகர் வள்ளியம்மை (வயது 90), வீரகத்திவிநாயகராஜா (வயது76) வேலுப்பிள்ளை செல்லமுத்து (வயது 80), வேலுப்பிள்ளை சின்னத்தங்கம் (வயது 80), யோசெப்பிலோசம்மா (வயது 75), வைத்திலிங்கம் கந்தையா (வயது 85), சுவாம்பிள்ளை அந்தோனிப்பிள்ளை (வயது 85), மயில்வாகனம் மகேஸ்வரி (வயது 65), மார்ட்டீன் யோசெப் (வயது 75),

சித்தன்கேணிப் பகுதியைச் சேர்ந்த ஒருவர்: கந்தையா சண்முகநாதன் (வயது 80).

இளவாலைப் பகுதியில் இறந்த 8 பேர்கள் விபரம்: கே. செல்வராஜா (வயது 60), ரி. தயாளம்மா (வயது 72), வி. கந்தையா (வயது 82), எஸ். நடராஜா [வயது 76], கே. வெற்றிவேலு [வயது 81], கே. சின்னத்தம்பி [வயது 80], கே. அப்புத்துரை [வயது 82], எ. மீனாட்சி [வயது 80].

பன்னாலைப் பகுதியில் இறந்த நால்வரின் விபரம்: கந்தப்பிள்ளை தங்கம்மா [வயது 68], நல்லப்பு சின்னத்தங்கம் [வயது 82], கந்தப்பிள்ளை இளையபிள்ளை [வயது 92], முத்துக்குமாரு சின்னத்தங்கம் [வயது 70].

கீரிமலைப் பகுதியில் சூட்டுக்கு இலக்காகிப் பலியான ஒருவர்: சுந்தரம் சிவகுரு [வயது 55].

தெல்லிப்பழைப் பகுதியில் [60 வயது] மதிக்கத்தக்க பெண்ணொருவர் மரணித்துள்ளார். பெயர் விபரம் கிடைக்கவில்லை.

### தமிழிசையின்

சங்கீத கலாநிதிகளானதிருப் பாம்புரம் சிவசுப்பிரமணிய பிள்ளை, மதுரை சோமு ஆகியோரின் பாணியைப் பின்பற்றுவது சுகமாக இருந்தது. காலப்போக்கில் மேற்கூறிய எனதுஆசான்களினது பாணியிலிருந்து விலகி மரபில் எந்த மாற்றமுமின்றி எமக்கென்று ஒரு பாணியில் தமிழ் சொற் பொருட் பதங்களுக்கு அதி முக்கியத்துவம் கொடுத்துப் பாடி வருகிறேன்.

★ ஒரு பாடகரை இசைக் கலைஞர்என்று தீர்மானிப்பது மக்களா, விமர்சகரா இசை மேதைகளா?

சங்கப் பலகை இசைஞர் குழாம். அடுத்து மக்களின் ஆதரவுதான் பாடகரின் களம். இசையில் ஏணிவிமர்சகரும் தன்னம்பிக்கையோடு கூடியதிறமையுமாகும்.

## வலி-வடக்கில் 40 பேர் ராணுவப்பிடியில் உள்ளனர்

### வண. ம. இ. பயஸ் அடிகளார் தகவல்

[குருநகர்]

காங்கேசன்துறைப்பகுதியை கடந்த 1990 ஆம் ஆண்டு சிறிலங்கா இராணுவத்தினர் சுற்றி வளைத்த போது நூற்றுக்கும் மேற்பட்டோர் அங்கே சிக்கிக் கொண்டனர்.

அவர்களில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரால் 39 பேர்கள் மீட்டு வரப்பட்டனர்.

14 பேர்கள் மரணமடைந்துள்ளனர். 13 பேர்களைக் காணவில்லை. 40 பேர்கள் இன்னமும் அங்கே நடைப் பிணங்களாகச் சொந்த வீடுகளிலேயே அகதி நிலையில் வாழ்கின்றனர்.

சமீபத்தில் இளவாலைப் பகுதிக்கு ஆயருடன் சென்று திரும்பிய யாழ். மறை மாவட்ட மனித முன்னேற்ற நடுநிலைய இயக்குனர் வண. ம. இ. பயஸ் அடிகளார் அவர்களின் பெயர் விபரங்களை எடுத்து வந்துள்ளார்.

பெயர் விபரங்கள் வருமாறு: திருமதி நாகமுத்து சின்னம்மா [வயது 92], செல்வி நாகமுத்து குணலட்சுமி [வயது66], திருமதி புஸ்பமலர் [வயது 38], திரு. என். கந்தையர் [வயது81], இரத்தினசிங்கம் கந்தசாமி [வயது 65], இவர்கள் அனைவரும் காங்கேசன்துறையைச் சேர்ந்தவர்கள்.

தையிட்டியைச் சேர்ந்தவர்கள் விபரம் வருமாறு: திருமதி சேதுப்பிள்ளை [வயது 77], திரு. வி. ஆசைப்பிள்ளை [வயது 58], திருமதி ரி. சின்னத்தங்கம் [வயது 68], திரு.

( 8 ஆம் பக்கம் பார்க்க )

வல்வை - பருத்தித்துறை கடற்பரப்பில்

# சிறிலங்காகடற்படைஅட்டகாசம் துப்பாக்கிச்சூடு;பீரங்கித்தாக்கு;

## 3 மீனவர் கைது; பலர் மீது தாக்குதல்

(வடமராட்சி)

பருத்தித்துறை வல்வெட்டித்துறை கடற்பரப்பில் ரோந்து சென்ற சிறிலங்கா கடற்படையினர் வல்வெட்டித்துறை கடற்பரப்பில் பெரும் அட்டகாசங்களைச் செய்து விட்டு கடலில் தொழிலில் ஈடுபட்டிருந்த ஆதிகோவிலடியைச் சேர்ந்த மூன்று மீனவர்களையும் அவர்களது மீன்பிடி உபகரணங்களையும் தமது படகுடன் எடுத்துச் சென்றனர்.

சிறிலங்கா கடற்படையினர் 'வீரயா சூரயா' என்ற பாரிய கப்பலில் திடீரென நேற்று காலை 10 மணியளவில் வந்து கடலில் காணப்பட்ட மீனவர்களை நோக்கி சரமாரியாக சூட்டும், ஷெல் தாக்குதலையும் மேற்கொண்டனர்.

இதே வேளை இத்தாக்குதலுக்கு அஞ்சி சில மீனவர்கள் தப்பியோடிய போதிலும் வல்வெட்டித்துறை ஆதிகோவிலடியைச் சேர்ந்த குடும்பஸ்தர்களான பொன்னுத்துரை புவனேந்திரம் (வயது 24), பரமானந்தராசா ராதா (வயது 27), கனகு-அருமைத்துரை (வயது35) ஆகிய மூன்று மீனவர்களையும் அவர்களது மீன்பிடி உபகரணங்களையும் தமது படகில் போட்டு எடுத்துச் சென்றுள்ளனர். அதே இடத்தைச் சேர்ந்த மு. சாமிவேல் (வயது 53), ந. சுந்தரலிங்கம் [வயது 45], இ பூபாலச்சந்திரன் [வயது 42] ஆகியோர் கடலில் குதித்து மயிரிழையில் உயிர் பிழைத்தனர்.

மேலும் பருத்தித்துறை கடற்பகுதிக்கு வந்த கடற்படையினர் இரு படகுகளில் மீன் பிடிக்கச் சென்ற முனையைச் சேர்ந்த இராசதுரை செல்வம் [வயது 30], எஸ். இராசா [வயது 28] காத்தான் என்றழைக்கப்படுபவரும், கோவியடியைச் சேர்ந்த ம. துரை [வயது 25) நடேசு ஆரோக்கியநாதன் (வயது 38) பே. இரத்தினம் (வயது 32) ஆகியோரைப் பிடித்துவைத்து பலமாக தாக்கிவிட்டு ஆறு மீனவர்களை விடுவித்தனர்.

மேற்படி சம்பவம் தொடர்பாக கடற்படையினால் கைது செய்யப்பட்டவர்களின் உறவினர் யாழ். அரச அதிபரிடம் முறைப்பாடு செய்துள்ளனர் என தெரிய வருகின்றது. மேலும் சிறிலங்கா கடற்படையினரின் இந் நடவடிக்கை தொடர்பாக யாழ். அரச அதிபருடாக கூட்டுப்படைகள் தலைமை அலுவலகத்திற்கு தெரிவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகவும் தெரிய வருகின்றது. (யோ), (பா)

## கட்டுமரத்தைசுற்றிவளைத்து மூவரை கைதுசெய்தனர்

### தப்பிவந்த மீனவர் தகவல்

[வடமராட்சி]

"கடலில் நாங்கள் தொழிலில் ஈடுபட்டிருந்த வேளை எம்மை நோக்கி சிறிலங்கா கடற்படையினரின் பாரிய கப்பல் ஒன்று ஷெல் வீச்சு துப்பாக்கி வேட்டுகளை ஏவியவாறு எம்மை நெருங்கியது."

இவ்வாறு கடலில் கடற்படையினரின் ஷெல் வீச்சு, துப்பாக்கி வேட்டுக்களின் மத்தியில் உயிர் தப்பி கரையை வந்துசேர்ந்த வல்வெட்டித்துறை ஆதிகோவிலடியைச் சேர்ந்த இ பூபாலச்சந்திரன் [வயது 42] தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; "நாங்கள் இயந்திரம் இல்லாத கட்டுமரத்தில் மீன் பிடிக்கச் சென்றிருந்தவேளை திடீரென எதிர்ப்பட்ட கடற்படையினர் எம்மை நோக்கி சாரமாரியாக வேட்டுக்களைத் தீர்த்தனர் நானும் என்னுடன் வந்த மு.சாமிவேல் [வயது53]. ந சுந்தரலிங்கம் [வயது 45] ஆகியோரும் பதறிய நிலையில் செய்வதறியாது நிற்கையில் அருகில் மீன்பிடித்துக் கொண்டிருந்த மூன்று மீனவர்களையும் கடற்படையினர் நெருங்கி தமது படகில் ஏற்றினர். அவர்களது உபகரணங்களையும் தமது படகில் போட்டனர்.

"கடற்படையினரைக் கண்டதும் பிடிக்கப்பட்டவர்கள் இயந்திரம் அல்லாத கட்டுமரத்தை கரையை நோக்கி செலுத்த முற்பட்ட போது கடற்படையினரின் படகு வேகமாக வந்து அவர்களது கட்டுமரத்தை வளைத்துக் கொண்டதினால் அவர்களால் தொடர்ந்து போகவோ, கடலில் குதிக்கவோ முடியாமல் போய் விட்டது. அவர்களைப் பிடித்த கடற்படையினர் மூவரையும் பலமாகத் தாக்கினர்.

"தொடர்ந்து எம்மை பிடிக்க கடற்படையினர் முற்பட்டதை உணர்ந்த நாங்கள் கடலில் குதித்து கரையை வந்தடைந்தோம் பின்னர் கடற்படையினர் கடற்பிராந்தியத்தில் தொடர்ந்தும் வேட்டுக்களை ஏவியவாறு தொண்டமனாறு பகுதியை நோக்கி சென்றனர். பின்னர் எமது கட்டுமரத்தையும் வலையையும் மீட்டுவர முடிந்தது என்றார். [யோ]

வலி-வடக்கில்

எஸ். இளையதம்பி [வயது77], திருபதி இ. தெய்வானை [வயது 72], திரு. எ சின்னையா [வயது 78], திருமதி எஸ் தெய்வானை [வயது73], திரு. எ வேலாயுதம் [வயது71], இ கணபதிப்பிள்ளை [வயது 67], எம் இளையதம்பி [வயது 86], பி. துரைச்சாமி [வயது 62], திருமதி எஸ். செல்லம்மா [வயது 78], திருமதி எஸ். ஆச்சிப்பிள்ளை [வயது 68], இ. கணபதிப்பிள்ளை [வயது 81], திருமதி கே கண்பணி [வயது 76], எ. இராசதுரை [வயது 55], திருமதி ஆர். சிதம்பரஈஸ்வரி [வயது 49] திருமதி எ. ஆசைப்பிள்ளை [வயது78], எ. செல்லப்பா [வயது 81], திருபதி எஸ் லட்சுமி [வயது 76], எஸ் கந்தையா [வயது 87], என். பொன்னம்பலம் [வயது 81], திருமதி பி முத்தாச்சி [வயது 78]. வி. கிருஷ்ணபிள்ளை [வயது 79], வி. வலிபுரம் [வயது 82], எஸ். துரைச்சாமி [வயது 78] கே. முதலித்தம்பி [வயது 75] கே. சின்னத்தம்பி [வயது 78], திருமதி எம். செல்லம்மா [வயது 68], திருமதி வி. வள்ளிப்பிள்ளை [வயது 88], கே. இளையதம்பி [வயது 78], திருபதி இ. பொன்னம்மா [வயது 72]

பலாலியைச் சேர்ந்த இருவரது பெயர் விபரம்: சின்னப்பு சின்னையா [வயது 85], திருபதி அந்தோனிப்பிள்ளை அன்னம்மா [வயது 74].

மயிலிட்டியைச் சேர்ந்த ஒருவர் திரு. கே. கந்தப்பிள்ளை [வயது 69]. (21)

கிளாலிக்

நீந்தி வந்து கொண்டிருந்த போது ஒருவர் மரணமானார் மற்றைவர் நீந்தி கரைவந்து சேர்ந்தார்.

இச் சம்பவத்தில் தவம் (நவாந்துறை), சின்னவன் (புங்குடுதீவு). ஜெகன் (மண்டைதீவு), தேவதாஸ், றோய் ஆகியோரே கொல்லப்பட்டவர்களாவர்.

இப் படகில் பயணம் செய்த பார்த்தீபன் (மண்டைதீவு) என்பவரே காயமடைந்த நிலையில் நீந்தி கரையை அடைந்தவராவார்.

இதே வேளை இப்படகு கொழுந்துவிட்டு எரிந்ததை ஏனைய படகுகளில் வந்தவர்கள் அவதானித்ததாக தெரிவிக்கப்படுகிறது. (22)(நி)

பலத்த

தியும் அப்பகுதிக்கு அடிக்கடி சென்று வந்ததாகவும் அப்பகுதியில் இருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன

ஒரு மணித்தியாலமாக அப்பகுதியில் குண்டுச்சத்தங்கள், ஷெல் சத்தங்கள் கேட்டபோதிலும் சேத விபரங்கள் பற்றி எதுவும் கிடைக்கவில்லை. [யோ]

கிராம

பயிற்சிநெறியில் தொகுதி தொகுதியாகப் பயிற்சி பெறவுள்ளனர்.

75 கிராம அலுவலர்களை உள்ளடக்கிய முதற் தொகுதியினருக்கான பயிற்சி வகுப்புக்கள் வரும் பெப்ரவரி 6ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு பல்கலைக்கழகத்தில் ஆரம்பமாகவுள்ளன. சனி ஞாயிற்றுக் கிழமைகளில் காலை 9 மணி முதல் பி.ப. 1-30 வரை வகுப்புகள் இடம்பெறும். விரிவுரைகள், கலந்துரையாடல்கள், செய்முறைகள் மூலம் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

பல்கலைக்கழக விரிவுரையாளர்களும், அரசாங்க உயர்நிலை அதிகாரிகளும் பயிற்சி வகுப்புகளை நடாத்தவுள்ளனர். பயிற்சிநெறியின் முடிவில் சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளன.

சர்வதேச சம்மேளன செ. சி. சங்க

## பிரதம செயலாளர் யாழ். விஜயம்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச சம்மேளன செஞ்சிலுவைச்சங்கத்தினதும் செம்பிறைச்சங்கங்களினதும் பிரதம செயலாளர் திரு ஸ்ரீபல்டா லி உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு விரைவில் யாழ்ப்பாணம் வரவுள்ளார்.

இவர் இங்குள்ள இடம்பெயர்ந்தோருக்காக இயங்கும் முகாம்களைப் பார்வையிட்டு தங்கியுள்ளோரின் குறைகளை கேட்டறியவுள்ளார்.

மேலும் செஞ்சிலுவைச் சங்கத் தலைவர்கள், அதிகாரிகள் மற்றும் அலுவலக ஊழியர்களையும், ஊக்கமளிக்கும் துணை நிறுவனங்களின் பிரதிநிதிகளையும் சந்தித்து உரையாடவுள்ளார். அத்துடன் அகதிகள் மற்றும் நலிவுற்றோர் பிரச்சினைகளைப்பற்றியும் ஆராயவுள்ளார்.

இவர் 1980 இன்பின் யாழ்ப்பாணத்திற்கு விஜயம்செய்யும் முதல் செஞ்சிலுவைச் சங்க முதிர்ந்த அதிகாரி என்பது குறிப்பிடத்தக்கது.

## இனப்பிரச்சினை குறித்து பகிரங்க விவாதம் நடத்துக

### -குமார் பொன்னம்பலம் கோரிக்கை

(கொழும்பு)

தொலைக்காட்சியில் அபிவிருத்தித்திட்ட விவாதத்தை நடத்துவதற்கு முன்னர் இலங்கை இனப்பிரச்சினை தொடர்பாக தொலைக்காட்சியில் அரசியல் கட்சிகளிடையே பகிரங்க விவாதத்தை நடாத்துமாறு தமிழ்க் காங்கிரஸ் கட்சி பொதுச் செயலர் குமார் பொன்னம்பலம் சிறிலங்கா ஜனாதிபதியைக் கோரியுள்ளார்.

கடந்த நான்கு வருட காலமாக ஐ தே. க சி அரசு மேற்கொண்ட அபிவிருத்தித் திட்டங்கள் பற்றி பகிரங்க விவாதத்தை தொலை காட்சியில் நடாத்த சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசா எதிர்க்கட்சியினருக்கு அழைப்பு விடுத்திருந்ததும் அதை அவர்கள் ஏற்றுக் கொண்டதும் தெரிந்ததே.

இது தொடர்பாக சிறிலங்கா ஜனாதிபதிக்கு எழுதியுள்ள கடிதத்தில் "இவ்வாறான ஒரு விவாதம் நடத்தப்படுமாயின் இலங்கைத் தமிழர் பிரச்சினை தொடர்பாக பல்வேறு அரசியல் கட்சிகளும் கொண்டுள்ள கருத்துக்களை உலகம் முழுவதும அறிந்து கொள்வதற்கான ஒரு சந்தர்ப்பமாக இது அமையும்" என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

வெள்ளைக்கொடி

"நானும் கடலில் குதிக்க மற்றவர்களும் படகில் ஏறி தீயை அணைத்தோம் அப்பொழுது இருவர் படகில் மரணமடைந்த நிலையில் காணப்பட்டனர். நாம் மீண்டும் பிரயாணம் தொடங்க முயற்சிசெய்த போது சிறிது நேரத்தில் ஆனையிறவிலிருந்து மீண்டும் வந்த ஹெலி மிகவும் தாழ்வாக-சுமார் இருபதடி உயரத்தில் பறந்து படகு மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தது. இதன் போது இருவர் பலியாகினர். படகு தீப்பற்றிக் கொண்டது. நானும், எனது நண்பர் தவம் என்பவரும் இறந்தவர்களின் சடலங்களைகடலில் வீசிவிட்டு காயமடைந்த நிலையில் கடலில் குதித்துவிட்டோம்".

"எனது நண்பரின் கையில் காயம் ஏற்பட்டு அவர் நீந்த முடியாது திணறினார். அதிக அளவு இரத்தமும் வெளியேறியதால் சோர்வடையத் தொடங்கினார். அவரைக் கரைக்குக்கொண்டுவர முயற்சி செய்தேன். ஆனால் அவர் நண்பகல் அளவில் மரணமடைந்துவிட்டார். அவரது சடலத்தைக் கொண்டுவரவும் முயற்சி செய்தேன். நான் களைப்படைந்துவிட்ட தாலும், நீரோட்டம் அதிகமாக இருந்ததாலும் முயற்சியைக் கைவிட வேண்டிவந்தது. பத்துமணி நேரம் நீந்திக்கரையைக் கண்டதும்தான் நான் உயிர் தப்பி விட்டதாக நம்பினேன். அதன் பின்னர் நான் மயக்கமடைந்துவிட்டேன்" என்றார்.

பூநகரி

பையும் ஒத்துழைப்பையும் அதிகளுக்கான ஐ நா. உயர் ஸ்தானிகராலயத்திடமும், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடமும் கோரியிருப்பதாகவும் பிரெட்மன் வீரக்கோன் தெரிவித்தார்.

## 'சிறுகதை எழுதல்' கருத்தரங்கு

'சாளரம்' நடாத்தும் 'சிறுகதை எழுதல்' பற்றிய கருத்தரங்கு இன்று மாலை 3-30 மணிக்கு புனித சாள்ஸ் மகா வித்தியாலய மண்டபத்தில் நடைபெறும். ஆர்வமுள்ள மாணவர். இளைஞர்களுக்கு எழுத்தாளர் செம்பியன் செல்வன் கருத்துரை வழங்குவார்.

## கருத்தரங்கு

[யாழ்ப்பாணம்]

யாழ். விஞ்ஞானச் சங்கத்தின் ஆதரவில் இன்று (வெள்ளி) மாலை 3 00 மணிக்கு யாழ். பல்கலைக் கழக முகாமைத்துவ மண்டபத்தில் "இலக்கியத்தில் இந்திய மருத்துவம் ஓர் அறிமுகம்" எனும் தலைப்பில் பல்கலைக்கழக நூலகர் திரு சி முருகவேள் உரைநிகழ்த்தவுள்ளார்.

ஆங்கிலத்தில் இவர் ஆற்றவுள்ள இவ் உரையை செவிமடுக்க ஆர்வமுள்ள அனைவரையும் தவறாது பங்குபற்றுமாறு யாழ். பல்கலைக்கழகத்தினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

## மரண அறிவித்தல்

### திரு. ஆ. சே. இராசா

வட்டு கிழக்கு, சித்தன்கேணியைப் பிறப்பிடமாகவும், கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. அ சே. இராசா (வெள்ளையர்) 25 - 01 - 1993 அன்று காலமானார். அன்னார் வித்துவான் ஆறுமுகம் சேனாதிராசா தம்பதிகளின் மகனும், சே. சபபந்தமூர்த்தி அவர்களின் அன்புச் சகோதரனுமாவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் 25 - 01 - 1993 திங்கள் மாலை நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

7/7 முதலாம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம். [4172]

தகவல்:
சே. சப்பந்தமூர்த்தி
(சகோதரர்)

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

### 28- 01- 93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 8176

வட பகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள் இல்லை.

வட பகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

| | | | | |
|---|---|---|---|---|
| 27-8125, | 41-9168, | 26-1690, | 28-3528, | 26-6796. |
| 26-7525, | 42-2323, | 27-2034, | 41-8292, | 26 9703, |
| 27-7740, | 27-4023, | 27-1141, | 26-4882, | 26-5493, |
| 42-1722, | 42-3756, | 28-278, | 26-525, | 40-2677. |

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி. 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 29 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.